# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

மார்ச் - 2017
பருவம் 3 புனல் 30

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



## தங்கமும், கூந்தலும், எனது அடையாளமல்ல!

- மதுரை மகிழ்



பெண்கள் நகை மாட்டும் ஸ்டாண்டுகளாக, அலங்காரப் பொம்மைகளாகச் சித்தரிக்கப்படும் நிலைக்கு அடிப்படையாகவும், ஜாதி உறவுகளைப் புனிதப் படுத்தும் தன்மையிலும், இருக்கும் இந்தக் காது குத்து விழாக்களைப் புறக்கணிப்போம்!

பெண்களை இழிவு படுத்தும் பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடைசெய்!





தொடக்கக்கல்வி முதல் உயர்கல்வி வரை வகுப்பறைகளில் அகர வரிசைப்படி alphabetical order ஆண் – பெண் மாணவர்கள் கலந்து அமரும் முறையை நடைமுறைப்படுத்து!
பள்ளிக்கல்வியிலிருந்தே பாலியலையும் ஒரு பாடமாகக் கற்பி!

புதுடெல்லி JNU, AIMS, போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் நடைமுறையில் உள்ள இருபால் பொதுவிடுதி முறையை Co-Hostels or Unisex Hostels பள்ளி – கல்லூரிகள் அனைத்திலும் நடைமுறைப்படுத்து !



காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்



### இது முழுமையான ‘மகளிர் சிறப்பிதழ்’

மகளிர் நாளை முன்னிட்டு, இந்த மார்ச் மாத இதழின் எழுத்து, தொகுப்பு, லே அவுட், அஞ்சல் அனுப்புதல், அச்சகச்செலவு, ஒருங்கிணைப்பு என அனைத்துப் பணிகளையும் மகளிர்மட்டுமே ஏற்றுச் சிறப்புடன் செயல்படுத்தியுள்ளனர்.


### இந்த இதழின் தொகுப்புக் குழு

எரிதழல்
திருப்பூர் வேணி
தாராபுரம் பூங்கொடி
டாக்டர் பெரியார்செல்வி
பல்லடம் ஜெய்சாந்தி
பல்லடம் திராவிடராணி
பல்லடம் தீபா
கோபி இரஞ்சிதா
மதுரை நிர்மலா
உடுமலை சுடரொளி
ஆத்தூர் விஜயலட்சுமி
பொள்ளாச்சி தனலட்சுமி
பொள்ளாச்சி கிருபாநந்தினி
திருச்சி சுபா
Lay Out தேவகி





# சமையல் மறுப்புப் போராட்டம்

*1. தொடக்கக்கல்வி முதல் உயர்கல்வி வரை அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும், வகுப்பறைகளில் மாணவர்கள் ஆண் - பெண் என தனித்தனியாக அமரவைக்கப்படும் முறையைத் தடை செய். அகர வரிசைப்படி (alphabetical order) ஆண் - பெண் மாணவர்கள் கலந்து அமரும் முறையை நடைமுறைப் படுத்து! பள்ளிக்கல்வியிலிருந்தே பாலியலையும் ஒரு பாடமாகக் கற்பி!*

*2. புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் நடைமுறையில் உள்ள ‘இருபால் பொதுவிடுதி’ முறையை (Co - Hostels or Unisex Hostels) பள்ளி - கல்லூரிகள் அனைத்திலும் நடைமுறைப்படுத்து!*

*3. பெண்களை வெறும் அலங்காரப் பொம்மைகளாக மட்டுமே உருவாக்கும் வகையில், குழந்தைப் பருவத்திலேயே நடத்தப்படும் காது குத்து விழாக்களைத் தடைசெய்!*

பெண் குழந்தைகள் பிறந்த ஒரு சில ஆண்டுகளிலேயே அவர்களுக்குக் காது குத்தப்பட்டு, நகைகள், பட்டு ஆடைகள் அணிவிக்கப்படுகிறது. அதுவும் அக்குழந்தையின் தந்தையுடைய குலதெய்வத்தின் கோவிலில், குழந்தையின் ‘தாய்மாமன்’ மடியில் அமர வைக்கப்பட்டு அந்தச் சடங்குகள் நடத்தப் படுகின்றன. இவை மாற்றக்கூடாத மத, இனப்பண் பாடாகவும் உள்ளன. பெண்கள் நகை மாட்டும் ஸ்டாண்டுகளாக, அலங்காரப் பொம்மைகளாகச் சித்தரிக்கப்படும் நிலைக்கு அடிப்படையாகவும், ஜாதி உறவுகளைப் புனிதப் படுத்தும் தன்மையிலும், ஜாதி வெறியைக்கு ஊக்கம் தரும் தன்மையிலும் இருக்கும் இந்தக் ‘காது குத்து விழா’க்களைப் புறக்கணிப்போம்!

*4. பெண்களை இழிவு படுத்தும் பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடைசெய்!*

வியர்வை, சிறுநீர், மலம் போல பெண்ணின் உடலில் இருந்து கழிவுகள் வெளியேறும் இயல்பான ஒரு உடல் இயக்கத்தை ‘பூப்புனித நீராட்டு விழா’ என ஒரு விழாவாக நடத்துவது, பெண்களைக் கொச்சைப் படுத்துவதாகும். பெண் குழந்தைகளின் மனதில் ஒரு மணப்பெண்ணுக்குரிய மனநிலையை உருவாக்கி, அக்குழந்தையின் வளர்ச்சியையும், எதிர்காலத்தையும் முடக்குவதோ -பெண் குழந்தைக திருமணத்திற்கு தயார் என்பதை அறிவிக்கும் நிகழ்வாகவேஇவ்விழாக்கள் உள்ளன. ‘தாய்மாமன்சீர்’ என்ற பெயரில் பெண்களின் விருப்பங்களுக்கு எதிராக, ஜாதிக்குள்ளேயே திருமணம் செய்யவேண்டும் என்ற ஜாதி ஆதிக்கச் சிந்தனைகளையும் திணிக்கின்றன இவ்விழாக்கள். ஆணாதிக்கத்தையும், ஜாதி ஆதிக்கத்தையும் மேலும் மேலும் உறுதிப்படுத்தும் ‘பூப்புனித நீராட்டு விழா’ க்களைத் தடைசெய்.

5. பெண்கள் திருமணத்திற்கு முன் தந்தையின் குலதெய்வத்தையும், திருமணத்திற்குப் பிறகு கணவனின் குலதெய்வத்தையும் வணங்க வேண்டும் என்ற நிலையில் உள்ள, மிகப்பெரும் பாலினப் பாகுபாடான 'குலதெய்வ வழிபாடு'களைத் தடைசெய்!

6.திருமணங்களில் பெண்களின் சம்மதத் தையும், பெண்கள் சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கு!

பெண்களின் திருமணத்திற்கு 18 வயது முடிவடைய வேண்டும் என்பது அடிப்படைத் தகுதியாக உள்ளது போல, சொந்தக் காலில் நிற்கும் நிலையில் - சொந்தமாக சம்பாதிக்கும் நிலையில் இருப்பதும் அடிப்படைத் தகுதி என சட்டமியற்ற வேண்டும். அதற்கென அனைத்து அதிகாரமும் கொண்ட மகளிர் ஆணையங்கள் உருவாக்கப்பட்டு, அந்த ஆணையங்கள், பெண்ணின் சம்மதத்தையும், சம்பாத்தியத்தையும் உறுதிப்படுத்திய பின்னரே திருமணங்கள் உறுதி செய்யப்படவேண்டும் என்று சட்டம் இயற்றவேண்டும். சட்டங்கள் வருவதற்கு முன் பெண்கள் இதில் உறுதியாக இருக்க வேண்டும்.

7. உடல் அழகே முக்கியம் என்ற எண்ணத்தை உருவாக்கும் அனைத்து விளம்பரங்களையும் தடைசெய்! பெண்களின் அலங்காரத்தைத் தவிர வேறு எதற்கும் பயன்படாத மலர் விவசாயம், மலர் வணிகம் ஆகியவற்றைத் தடைசெய்.

'உடல் அழகுதான் மிகமுக்கியம்' என்ற மனநிலை நோக்கிப் பெண்களை நகர்த்தும் நகை விளம்பரங்கள், அழகுப்பொருள் விளம்பரங்கள், பட்டுச்சேலை விளம்பரங்கள் போன்ற அனைத்தையும் தடைசெய்வதோடு, அவற்றின் உற்பத்தி, வணிகம் அனைத்தையும் தடைசெய்ய வேண்டும். முதற்கட்டமாக பெண்கள் அவற்றைப் புறக்கணிக்க வேண்டும். அழகு என்ற அடிப்படையில் கூட உலகில் முன்னேறிய நாடுகளில் உள்ள பெண்கள் எவரும் தலையில் பூ வைத்துக் கொள்வதில்லை. கிடாவெட்டுக்கு நேர்ந்து விடப்படும் செம்மறி ஆடுகளைப் போல, தேவையின்றி பூ வைத்துக்கொள்ளும் பழக்கத்தைப் பெண்கள் கைவிட வேண்டும்.

8. பெண்களுக்கு என தனியாக இருசக்கர வாகனங்கள் வடிவமைப்பதையும், தயாரிப்பதையும், அதன் வணிகத்தையும் தடைசெய்!

இருசக்கர வாகனங்களில் ஆண்களுக்கு ஒரு மாடலும், பெண்களுக்கு ஒரு மாடலும் வடிமைப்பது தேவையற்ற பாலினப்பாகுபாட்டை வளர்க்கிறது. பெண்களின் சேலை, தாவணி போன்ற ஆடைகள் ஆண்களுக்கான வாகனங்களை ஓட்டத் தடையாக இருந்தன. ஆனால், தற்போது, சேலை, தாவணிகள் குறைந்து சுடிதார், லெகிங்ஸ், ஜீன்ஸ் வகை ஆடைகள் வந்துவிட்ட நிலையிலும், பெண்களுக்குத் தனியாக , வாகனங்களை வடிவமைத்து விற்பனை செய்வது மிகப்பெரும் பாலினப்பாகுபாடு ஆகும். எனவே, பெண்களுக்கென தனியாக, வாகனத் தயாரிப்பு, விற்பனை, அவை குறித்த விளம்பரங்கள் அனைத்தையும் தடைசெய்ய வேண்டும். பெண்கள் இருசக்கர வாகனம் பழகுவதாக இருந்தால், சைக்கிள், பைக் போன்ற எந்தவகை வாகனமாக இருந்தாலும் ஆண்களுக்காக வடிவமைக்கப்பட்ட வாகனங்களிலேயே பழக வேண்டும். அவற்றையே பயன்படுத்த வேண்டும்.

9. 'திருமணம் தேவையில்லை' என்றும், 'குடும்ப அமைப்பே வேண்டாம்' என்றும் முடிவெடுத்துத் தனித்து வாழத் துணிந்த பெண்களுக்கு, அரசு மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளை உருவாக்கு! திருமணங்கள் உறுதிசெய்யப்படும் போதே, அந்த மணமக்களுக்குத் 'தனிக்குடித்தனம்' என்பதைக் கட்டாயமாக்கு! ஒன்றாக இருக்க வேண்டிய சூழல் இருந்தாலும், அந்தத் தம்பதிகள் இடையில் எக்காரணம் கொண்டும், எந்தச் சூழலிலும் இரு தரப்புப் பெற்றோர்களும் தலையிடுவது சட்டப்படிக் குற்றமாக அறிவிக்கப்பட வேண்டும்.

குடும்ப அமைப்பு என்பது பெண்களுக்குப் பெரும் சிறையே ஆகும். அதிலும் கூட்டுக்குடும்பங்கள் மிகக் கொடுமையான சிறைகளாக உள்ளன. எனவே, திருமணத்தைத் திட்டமிடும் போதே அவர்களுக்குத் தனிக்குடித்தனம் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும். சிறு குழந்தைகளைப் பராமரிக்க க்ரஷ்கள் உருவாவதைப் போல, பெற்றோர்களைப் பராமரிக்க அரசே, ஆங்காங்கே முதியோர் இல்லங்களை உருவாக்க வேண்டும். ஏற்கனவே இயங்கும் முதியோர் இல்லங்களைத் தரம் உயர்த்த வேண்டும். தேவையைப் பொறுத்து, பெற்றோர்களே முன்வந்து முதியோர் இல்லங்களை நாட வேண்டும்.

கிராமங்களில் நிலங்கள் ஒருங்கிணைக் கப்பட்டு, ஒருங்கிணைந்த கூட்டுப்பண்ணைகளாக விவசாயமும், அதன் துணைத் தொழில்களும் நடந்தால், மிக எளிய மக்களும் சுதந்திரமாக, தனிக்குடும்பங் களாக வாழ இயலும். அனைத்துக் கூட்டுப்பண்ணைகளும் முதியோர் இல்லங்களோடு இயங்கினால், வயதான காலத்தில் பெற்றோர் பராமரிப்பும் சாத்தியம்.

10. பெண் விடுதலை நோக்கிலும், மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் ஆண் -பெண் இருபாலரும் திருமணத்திற்கு முன்பே கருத்தடைச் சிகிச்சை களைச் செய்ய வேண்டும்!

பெண்களின் முழுமையான விடுதலைக்கு மிகப்பெரும் தடையாக இருப்பது குழந்தைபெறும் முறையும், குழந்தை வளர்க்கும் முறையும் ஆகும். பெண்ணின் விடுதலை, ஆணின் விடுதலை இரண்டுக்கும் எதிரானது குழந்தை பெறும் முறை. ஒவ்வொருவரும் சொத்து சேர்ப்பதற்கும், அதற்காக அனைத்துத் தவறான வழிகளையும் நாடுவதற்கும் அடிப்படையானது இந்த வாரிசு உருவாக்கும் முறை.

நாட்டின் முன்னேற்றம், வளர்ச்சி அனைத்திற்கும் தடையாக இருப்பது மக்கள்தொகைப் பெருக்கம். தனிப்பட்ட முறையில் மகளிருக்கும், ஆண்களுக்கும், ஒட்டுமொத்தமாக சமுதாய வளர்ச்சிக்கும் தடையாக உள்ள மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்த வேண்டும்.

தலைமுடியை க்ராப் செய்துகொள்ளும் பெண்களுக்கு தோழர் பெரியார் பரிசுகளை வழங்கினார். அதுபோல, திருமணத்திற்கு முன்பே கருத்தடை சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கும் - பிள்ளை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் ஆண், பெண் இருபாலருக்கும், நாட்டின் எதிர்கால நலன்கருதி அரசாங்கம், கல்வி- வேலை வாய்ப்பு களில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

*11.* இல்லப்பராமரிப்பிலும், சமையல் உள்ளிட்ட அனைத்து வீட்டு வேலைகளிலும், குழந்தை வளர்ப்பிலும் சமஉழைப்புக் கொடுக்காத ஆண்களுக்குக் கடும் தண்டனைகள் வழங்க வேண்டும். 'பாலினத் தீண்டாமை வன்கொடுமைத் தடுப்புச்சட்டம்' என்ற பெயரில் புதிய பாலின சமத்துவ நோக்கிலான சட்டங்களை உருவாக்க வேண்டும்.

இல்லப் பராமரிப்பில் உள்ள அனைத்துப் பணிகளிலும் ஆண்களும் இணைந்து பணியாற்ற வேண்டும். சமையல், வீடு சுத்திகரிப்பு, குழந்தை வளர்ப்பு என அனைத்திலும் ஆண்களும் இணைந்து பங்கேற்க வேண்டும். 'ஹவுஸ் ஒய்ஃப்' என்ற இனமே நாட்டில் இருக்கக்கூடாது. திருமணமாகும் பெண்கள் சொந்தக் காலில் நிற்பதை உறுதிசெய்த பிறகே திருமணம் என்பது சட்டமாக வந்தால், 'ஹவுஸ் ஒய்ஃப்கள்' உருவாக மாட்டார்கள்.

*12.* திருமணத்திற்கு முன்போ, திருமணத்திற்குப் பிறகோ, பெண்ணின் உடல் மீதுள்ள உரிமை முற்றிலும் பெண்களுக்கே! திருமணத்தின் பெயரால் - கணவன் என்ற உரிமையால் நடக்கும் (Marital Rape) பாலியல் வன்முறைகளைக் கடும் குற்றமாக்கு!

மேற்கண்ட அனைத்துப் பாலினப்பாகு பாடுகளுக்கும் எதிராக - பாலின வன் கொடுமைத் தடுப்புச்சட்டங்களை உருவாக்கக் கோரி, ஒரு அடையாளமாக, முதற்கட்டமாக, 2017 டிசம்பர் 24 ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும் ஒரு நாள் "சமையல் மறுப்புப் போராட்டம்" ***#Boycott Cooking #Boycott Kitchen*** நடத்துவோம்.

யாரும் தெருவுக்கு வரவேண்டாம். வெளியில் யாருடனும் போராடவேண்டாம். காவல் துறையோடும் நீதிமன்றங்களோடும் போராட வேண்டாம். சிறைசெல்ல வேண்டாம். இதுவரை வீட்டில் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அனைத்து அடிமைப் பணிகளையும் புறக்கணித்தால் மட்டும் போதும்.

ஜாதித் தீண்டாமை வன்கொடுமைகளுக்கு எதிராக இரட்டைக்குவளை உடைப்புப் போராட்டங்கள் நடந்தன. அதுபோல, இரண்டாம் கட்டமாக, பாலினத் தீண்டாமை வன்கொடுமை களுக்கு எதிராக, 'சமையலறை உடைப்புப் போராட்டம்' நடத்துவோம்.

# 'கருந்திணை ஒன்றுகூடல்'

## மதுரை 16.04.2017

2017 புத்தாண்டு நாளில் பல்லடத்தில் கருந்திணைக் குடும்பங்களின் ஒன்றுகூடல் நடைபெற்றது. கடந்த மார்ச் 12 ல் உடுமலை அருகே பெதப்பம்பட்டியில் தோழர்கள் யாழ்மொழி, கவிதா, குணசேகரன் ஆகியோரின் தோட்டத்தில் கொள்கைச் சொந்தங் களின் ஒன்றுகூடல் வெகுசிறப்பாக நடைபெற்றது.

வழக்கமாக மேற்கு மாவட்டங்களில் மட்டுமே நடந்து வந்த நமது கொண்டாட்டம், முதன்முறையாக மதுரை மாநகரில் நடக்க உள்ளது. மதுரை நத்தம் சாலையில், யாதவர் கலைக்கல்லூரிகளைக் கடந்து செல்லும் சாலையில் உள்ள ஜெய்பாரத் நகரில், தோழர்கள் நி.பா.மகிழ், நிர்மலா, பாபுகண்ணன் ஆகியோரது இல்லத்தில் வரும் 16.04.17 அன்று காலை 10 முதல் மாலை 5 வரை நடைபெற உள்ளது.

விழாவில், ஆவணப்பட வெளியீடு, எம்.ஆர்.இராதா கலைக்குழுவின் வீதி நாடகம் ஆகியவை இடம்பெறும். வழக்கம்போல, ஆடல், பாடல்கள் அதிர உள்ளன. அதற்கெனத் திட்டமிட்டுப் பயிற்சி எடுத்து வாருங்கள். எந்தப் பாடலுக்கு நடனம் என்பதை முன்கூட்டியே தெரிவியுங்கள்.

விழாவிற்காக பல்லடம் பேருந்து நிலையத் திலிருந்து தனிப்பேருந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. தோழர்கள், ஏப்ரல் 16 காலை சரியாக 7 மணிக்கு பல்லடம் பேருந்து நிலையத்திற்கு வந்து சேருமாறு கேட்டுக் கொள்கிறோம். வருகையை முன்கூட்டியே உறுதிப் படுத்துங்கள். சொந்த வாகனங்களிலும், இரயிலிலும் வருபவர்களும் தகவல் தெரிவிக்கவும். கட்டணம் கிடையாது.

தொடர்புக்கு:
திருப்பூர் வேணி 77084 58086, தாராபுரம் பூங்கொடி 95006 70620

தோழர் இரஞ்சிதா

# சமூகமும், சமூகத்தை எதிர்கொள்ளும் பெண்களும்

இன்றைய சமூகம் பெண்களைத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு கருவியாக மட்டுமே பார்க்கிறது. பெண் என்பவளை, வேலைக்காரி, ஆணுக்கும் அந்த குடும்பத்தினருக்கும் அடிமை, குழந்தைகளை வளர்ப்பதில் பொறுப்புள்ள அம்மா, சுய முடிவுகளை எடுக்க முடியாத நிலைமை, விரும்பிய உடைகளை அணிய முடியாத நிலைமை, கல்வியில் வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட துறைகளை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைமைகள் உள்ளன. அரசியலிலும், விளையாட்டுத் துறைகளிலும் விரல்விட்டு எண்ணும் அளவிற்கு பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. கற்பு, அழகு, ஆடைக்கட்டுப்பாடு போன்றவை பெண்ணிற்கு மட்டும்தான் என்ற கற்பிதங்களும் உள்ளது.



இவ்வளவும் வேண்டாம் என்று தனித்து வாழும் பெண்களுக்குப் பல துன்பங்கள், உடல்குறை, விபச்சாரி என்ற பட்டம் வேறு. சினிமா துறையில் 60 வயதான ஆண் கதாநாயகனாக நடிக்க முடிகிறது. இதே 35 வயதான பெண் கதாநாயகியாக நடிக்க முடிவதில்லை. திருமணமான பெண் கதாநாயகியாக நடிக்க முடிவதில்லை. திருமணமாகிப் பிள்ளை பெற்றால் சினிமா துறையே வேண்டாம் என்கிறது ஆண் சமூகம்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் திருமணமே செய்து கொள்ள வேண்டாம் என்று நினைக்கும் நாயகிகளை வயதாகிவிட்டது, அழகு இல்லை, ஆபாசம் இல்லை என்கிறது சினிமாத்துறை. ஒரு பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு புகார் அளிக்கக் காவல்நிலையத்திற்குச் சென்றால் மேல்சாதி ஆணாக இருந்தால் பேரம்பேசி வழக்கு வேண்டாம் என்கிறார்கள். அப்படி வழக்குப் போட்டால் இருவர் மீதும் போட வேண்டியதாக இருக்கும் என்று கூறி இலஞ்சம் வாங்கி வழக்கை முடிக்கிறது காவல்துறை. இவை இல்லாமல் காவல் நிலையம் வேண்டாம், புகார் வேண்டாம் என்று கூறி தற்கொலை செய்து கொள்ளும் பெண்கள் எண்ணிக்கையும் ஏராளம்!

பாலியல் வன்கொடுமைகளில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான்.இந்தியாவில் மட்டுமே கடந்த ஆண்டு (2016) பதிவான பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை 37,000. இதில் 50ரு தலித் பெண்கள் ஆவர்.இந்த குற்றப்பிண்ணனியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் உத்திரப் பிரதேசம். இதில் 5085 வழக்குகள் மைனர் பெண்கள் (18 வயதிற்கு கீழ் உள்ள பெண் குழந்தைகள்) என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து அரசியல் பார்வையில் 50 சதம் இட ஒதுக்கீட்டை பெறுவதற்குள் உதிரம் வற்றி விடும்போல. உள்ளாட்சியில் மட்டும் 50 சதம் இட ஒதுக்கீடு உள்ளது. அதையும் பெண்களா ஆட்சி செய்கிறார்கள்? பின்னால் இருக்கும் கணவரோ, கட்சியோதான் இயக்கு கிறது. கையெழுத்து மட்டும்தான் சம்பந்தப்பட்டவர் இடுகிறார்.

இதோடு விட்டதா சமூகம்? வேலைக்காரி, விதவை, ஆணுக்கு அடிமை, குழந்தைகளைக் கவனிப்பவள், வாழாவெட்டி, மலடி என்ற பட்டங்களைத் தந்து விடுகிறது. பெண்ணுக்கு மட்டும்தான் பட்டமா? ஏன் ஆண்களில் வேலைக்காரன், விபச்சாரன், விதவன் இல்லையா? விபச்சாரி என்று பெண்களை மட்டும் இழிவு படுத்தும் நிலை சமூகத்தில் உள்ளது. ஆண் விபச்சாரன்களும் சமுதாயத்தில் உள்ளனர். இவ்விசயம் பலருக்குத் தெரிவதில்லை.

உலக சுகாதார நிறுவனம் (World Health Organization) விபச்சாரி என்ற வார்த்தை அசிங்கம் எனக் கருதி (Commercial sex workers) பாலியல் வர்த்தகத்தொழிலாளி என்று அழைக்கிறது. 'மலடி' என்ற வார்த்தை பெண்ணுக்கு மட்டும்தானா? ஏன்? ஆண்களில் 'மலடன்' இல்லையா? கரு உருவாவதற்கு பெண்ணிடம் மட்டுமா குறைபாடு இருக்கும். ஏன் ஆணிடம் இருக்காது.? சமூகம் ஏன் ஆண்களை 'மலடன்' என்று கூறவதில்லை.

பெண்களுக்குச் சிறு வயதிலே திருமணம் செய்து வைப்பது எதற்கென்றால், இன்னொரு சாதி ஆணுடன் சேர்ந்துவிடக்கூடாது. அதன் மூலம் கருவுற்றிடக்கூடாது. தன் சாதிக்காரன் தன்னை ஒதுக்கி வைப்பான்,கௌரவம் போய்விடும் என்ற நிலைபாட்டில் சமூகம் உள்ளது. ஆக மனுதர்மத்தில் பால்ய விவாகம் என்ன சொல்கிறதென்றால், “பெண் என்பவள் பூப்படைவதற்கு முன்னே திருமணம் செய்ய வேண்டும். இல்லையென்றால் உண்மையான கற்பு, உண்மையான ஒழுக்கம் இருக்காது, பெண்களின் வாழ்க்கை நாசமடைந்துவிடும்”. இதை ஆச்சாரியார் பேசியதாக ‘சுதேசமித்திரன்’ பத்திரிக்கையில் காணப்படுகிறது.

இங்கே பால்ய விவாகம், காதல், கற்பு என்ற விஷயத்திலெல்லாம் ஒன்றே ஒன்றை மட்டும் அடிப்படையாகப் பார்க்க முடிகிறது. தான் சார்ந்த சமூகத்துடனான ஆணுடன் மட்டுமே பெண் சேரவேண்டும். அப்படி இல்லையென்றால் கருவறுத்துக் கொலை செய்யவும் இந்தச் சமூகம் தயங்குவதில்லை. பெண் கீழ்சாதியாக இருந்தால் கருவறுத்துக் கொடூரமாகக் கொலை செய்யப்படுகிறாள். ஆண் கீழ்சாதியாக இருந்தால் கொடூரமாகப் பொது இடங்களில் வெட்டிக் கொலை செய்யப்படுகிறான்.

எனவே, பெண்களே உங்களை நீங்கள் உயர்த்திக்கொள்ள வேண்டுமாயின்:-

1. உங்கள் கல்வித்தரத்தை உயர்த்துங்கள்.
2. வாழ்விடங்களை மாற்றி நகரம் நோக்கிச் செல்லுங்கள்.
3. ஆண்-பெண் பாகுபாடு இல்லாமல் எல்லாத் துறையையும் எதிர்நோக்கிச் செல்லுங்கள்.
4. உங்களை அடிமைப்படுத்திக் காட்டும் தாலி, மெட்டி போன்றவற்றை அணியாதீர்கள்.
5. பிள்ளை என்ற தொல்லைகளைப் பெற்றுக் கொள்ளாதீர்கள்.
6. உங்கள் வாழ்க்கைத் துணையை நீங்களே தேர்ந்தெடுத்து வாழுங்கள்.
7. உடல் சம்பந்தமான தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ளாதீர்கள்.
8. பெண்களை இழிவுபடுத்தும் பூப்பு நன்னீராட்டு விழாவைப் புறக்கணியுங்கள்.


**துணைவர் தேவை**

எம்.எஸ்.சி., பி.எட்., படித்து ஆசிரியர் பணியில் உள்ள பெண்ணுக்குத் துணைவர் தேவை. வயது 32. மணமுறிவு பெற்றவர். 8 வயதுப்பெண் குழந்தைக்குத் தாய். ஜாதி, மதம் தடையில்லை. ஜாதி மறுப்புக்குத் தயாராக உள்ள தோழர்கள் தொடர்பு கொள்ளவும்.

தோழர் சரவணன்: 98949 25226


# விண்மீன்களை ஒளிர விடு !!!


தோழர் கண்மணி புரட்சிகர இளைஞர் முன்னணி


அன்னையிடம் பால் பருகும் வயதில்
அந்நியனிடம் பாலியல் தொல்லை.

ஆணை உயிராகப் பார்க்கும் சமூகம்
அவளை வெறும் உடலாகப் பார்க்கிறது.

கார்ப்பரேட்டின் காசுக்காக
காணும் இடமெல்லாம்
கன்னிப்பெண் வெறும்
கவர்ச்சிப்பொருள்.

அலங்காரக் கொண்டை,
ஆறு முழப் பூ,
இடை தெரிய சேலை,
உதடுகளை உரித்துக்காட்ட
உதட்டுச் சாயம்,
எல்லாம் பெண்ணியம் பேசும் சமூகத்தின்
வெளுத்துப்போன சாயம்.

சிந்தனையை வளர்க்க வக்கற்ற சினிமாத்துறை,
சின்னஞ்சிறு பிள்ளையின்
சிற்றாடை அவிழ்க்கவேத் தூண்டுகிறது.

சமூகமே,
எங்கள் மார்பகங்களைப் பார்த்தது போதும்,
மனிதிகளாய்ப் பார்.

கவர்ச்சிப் பொருளாய்
காட்சிப்படுத்தியது போதும்,
காலத்தின் குரலாய்
கானம்பாட விடு.

விந்துநீரைச் சிந்தி,
விண்மீன்களை எரித்தது போதும்.
வாழ்க்கை வானில்,
அவைகளை ஒளிர விடு.

ஆணாதிக்க சமூகமே,
பெண்ணின் சாயலை
சாதி மத சடங்குகளால்
மறைத்துவிட்டு,
மகளிர் தினக் கொண்டாட்டமா??

உன் சாதியும், மதமும்
சடங்கும், சம்பிரதாயமும்
செல்லறித்துச் செத்தபின்பே
மகளிர்தின கொண்டாட்டம்.
அப்போது பிறந்திருக்கும் சம உரிமை,
மலர்ந்திருக்கும் பொதுவுடமை..
அதுவரை எமக்கில்லை கொண்டாட்டம்,
எங்கள் வாழ்வு வெறும் போராட்டம்.

கிருபா நந்தினி

# ஆராய்ச்சித்துறையில் பெண்களின் நிலை



மகளிர் தினம்.1857,1907,1910,1920 ஆகிய வருடங்களில் பல போராட்டங்களை நடத்தி இறுதியில் 1921-ல் கிளாரா செட்கின், ரோசா லக்சம்பேர்க், போன்றோர்களால் விழிப்புணர்வு தன்னபிக்கை, வளர்த்துக் கொண்டு ஆண்களின் அடிமைச் சமூகத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவே மார்ச் 8 ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.

ஆனால் 2017-ல் இன்றும் விடுதலை வேண்டி போராடிக்கொண்டு தான் இருக்கிறோம். பாலினம், சாதி பற்றி ஒரு பெண்ணால் எடுக்கப்படும் குறும் படங்களைக் கூடத் தடை செய்யும் நிலையில் தான் உள்ளோம் (உதாரணம்: ‘கக்கூஸ்’ லெ திவ்யா பாரதி)

நான் வன உயிரின ஆராய்ச்சி (Wildlife Researcher) மாணவி என்பதனால் குறிப்பாக இந்தத் துறையில் ஆரம்பத்திலிருந்து நடைபெறும் பிரச்சனைகளையும், என்னுடைய மற்றும் எனது நண்பர்களின் அனுபவத்தை கூறகிறேன்.

எவ்வளவு பெரிய வேலையிலிருந்தாலும், துறையாகயிருந்தாலும் அதற்குத் தகுந்தாற்ப்போல் பெரிய அடிமைத்தனம், அரசியல் நடத்தி அவர்களின் அறிவு, நேரம், உடல் உழைப்பு, சிந்தனை போன்றவற்றைத் திருடவும், தடைசெய்தும் தாழ்த்தப்பட்ட மாணவர்களை, ஆசிரியர்களை, பெண்களைப் பின்னுக்குத் தள்ள முயல்கிறது பார்பன மற்றும் ஆன்கள் சமூகம்.

ஆனால் படித்தவர்களுக்கே இது புரியாமல் ‘தற்போது தாழ்த்தப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெண்கள் வசதியாகத்தான் இருக்கிறார்கள் என்கின்றனர்’ எதற்கெடுத்தாலும் அப்துல் கலாம், கிரண்படி போன்றோரை அவர்களுக்கு பின்னனியிலிருக்கும் அரசியல் தெரியாம லேயே மேற்கோள் காட்டுவது வருத்தமாகவே உள்ளது.

ஆராய்ச்சித் துறையில் 87.27% - ஆண்கள் , 12.78% பெண்கள்.

## அறிவியல்துறை வரலாறு

ஈபில் டவரில் (Eiffel Tower) நோபல் பரிசு பெற்றவர்களின் 72 விஞ்ஞானியின் பெயர்கள் பொறிக்கபடுகிறது. ஆனால் மாரி சோஃபி என்ற பெண் விஞ்ஞானி இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவரின் பெயர் பொறிக்கப்படவில்லை. அவர் பெண் என்பது மட்டுமே காரணமாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

Rosalind Franklin என்ற பெண் ஆராய்ச்சியாளர் 1920-ல் பிறந்தார், 1958 ல் X கதிர் வீச்சு பற்றிய ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றார். அதன் பின் டி.என்.ஏ இரட்டைச்சுழல் அமைப்பை (DNA double helix structure) கண்டுபிடித்தார். இதனைத் திருடி வெளியிட்டு நோபல் பரிசும் வாங்கினார்கள் வாட்சன் மற்றும் கிரிக் என்ற இரண்டு ஆண்கள். பள்ளி- கல்லூரி பாடபுத்தகங்களில் கூட வாட்சன் மற்றும் கிரிக் ஆகியோர் டி.என்.ஏ இரட்டை சுழல் அமைப்பைக் கண்டுபிடுத்ததாகவும், அதற்கான நோபல் பரிசு பெற்றதாகவும் கூறப்பட்டு, கற்பிக்கப்பட்டும் வருவது கொடுமை.

## பெண் ஆராய்ச்சியாளர்கள் சந்திக்கும் தடைகள்

நான் படிக்கும் ஆராய்ச்சி நிலையத்தில் 14 ஆண்கள் உள்ளனர். ஒரே ஒரு பெண் விஞ்ஞானி தான் உள்ளார். அவரும் பார்ப்பனர் என்பது குறிபிடத்தக்கது. ஆய்வு மாணவர்களில் 30 பேர் ஆண்கள், 8 பெண்கள் அதில் 4 பேர் பார்ப்பனர்கள்.

எனது PhD Guide, மற்றும் seniors பார்ப்பனர். எனது ஆய்வு அதிக நேரம் ஆய்வகத்தில் தான். கற்றுக் கொடுக்க மறுத்தார்கள். முன்னுக்குப்பின் குறைக் கூறுவது, “நீ படித்து என்ன பண்ணப் போற?” என்று தாழ்த்துவது போன்ற தடைகளைத் தொடர்ந்து கொடுக்கையில் - நாம் ஆய்வு குறித்துச் சிந்திப்பதை விட, இந்தத் தடைகளைச் சமாளிக்க அல்லது உடைத்துத் தாண்டி வரத் திட்டமிடுதலில் தான் அதிக கவனமும், நேரமும் செலுத்த வேண்டியுள்ளது. இதில் என்னுடைய ஆய்வுபற்றிய சிந்தனை, வேலைகள் தடைபடுகின்றன. இவை அனைத்தும் இணைந்து இறுதியில் மிகப்பெரிய இழப்பாகக் குவிந்து முன்னேற்றம் தடைபடுகின்றன.

## எனது நண்பர்களின் அனுபவம்

பெயர் குறிப்பிட வேண்டாம் (குறிப்பிட்டால் மேலே குறிப்பிட்டது போல இடையூறுகளுக் குள்ளாக நேரிடும்). எனது நண்பர். இப் பெண்ணுக்கு கேரளாவில் உள்ள அகஸ்த்தியர் மலையில் தான் ஆய்வுப்பணி. ஏற்கனவேயிருக்கும் சபரிமலைப் பிரச்சனை போன்று அகஸ்த்தியர் மலையிலும் வயது வந்த பெண்களுக்கு அனுமதி மறுக்கபட்டிருக்கிறது. ஆய்வுக்காக மறைந்த மூத்த விஞ்ஞானி, முனைவர் பூபதி அவர்களின் பல முயற்சிளைத்தாண்டி ஒரு சில கட்டுபாடுகளுடன் அனுமதி வழங்கப்பட்டது. அதுவும் பண்டிகை நாட்களில் செல்லக்கூடாது. வனத்துறை சொல்லும் காரணம் பாதுகாப்புக் கருதி அனுமதி மறுக்கப்படுகிறது. அப்படியானால் யார் இந்த பாதுகாப்புக்குத் தடையாய் (பக்தர்கள்) இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் காட்டிற்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு பெண்களின் ஆராய்ச்சிக்குத் தடை விதிக்கப்படுகிறது.

இவ்வளவு தடைகளை மீறி வெற்றிகரமாக இறுதிப் பயணத்தின் போது 28 ஏப்ரல் 2014-ல் மூத்த விஞ்ஞானி, முனைவர் பூபதி அவர்கள் அகஸ்தியர் மலையிலிருந்து கீழே இறங்கும் பொழுது தவறி விழுந்து இறந்து விட்டார். சொல்லவா வேண்டும் நம்மக்களுக்கு? இப்பெண் கலாச்சாரத்தை மீறியதால் தான் இப்படி நேர்ந்துவிட்டதாக பலி சுமத்தினர். தற்போது இப்பெண் (ஒடிசா பார்ப்பன பெண்) விஞ்ஞானியாக உள்ளார்.

அதித்தி முகர்ஜ்ஜி (Adity Mukarji) ராஜத்தானில் கிளியாடோ தேசிய பூங்காவில் (KNP) குகை விலங்குகள் (Burrow animals - எ.கா. மலை பாம்பு) பற்றி ஆய்வு செய்து வருகிறார். இவர் தங்கியிருந்த அறையில் ஒரு ஆண் அத்துமீறி நுழைந்து தவறாக நடக்க முயற்ச்சித்தான். தற்போது வழக்கு நடந்து கொண்டிருப்பினும் முதலில் இப்பெண்ணுக்கு எதிராகவே இருந்தது. பல போராட்டங்களுக்குப் பின் நடவடிக்கைகள் எடுக்க தொடங்கினர். (வங்காளப் பார்ப்பன பெண்).

சாதரணமாகவே ஆய்வுப்பணி என்பது 24 மணி நேரமும் சிந்தித்து எடுத்துக்கொண்ட பிரச்சனைக்கான தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும். அதிலும் வன உயிரின ஆராய்ச்சி என்பது உடல், மனம், மூளை என அனைத்தும் வலிமையாக இருந்தால் மட்டுமே பல வகையான காடுகளிலுள்ள மேடு, பள்ளம், விலங்குகள், மனிதர்கள் என அனைத்தையும் எதிர்கொள்ள முடியும்.

பெண்கள் இவை அனைத்திற்கும் தயாராக இருந்தால் மட்டுமே இத்துறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அதையும் மீறி இவர்களுக்கே இந்நிலை என்றால் மற்ற துறையிலிருக்கும் பெண்களின் நிலை எப்படியிருக்கும் என்று நினைத்துபாருங்கள்.

பெரியார் - மணியம்மையார், காரல் மார்க்ஸ் - ஜென்னி இன்னும் சிலர் சாதி, பாலினம் போன்ற அடிமைப்படுத்தப்பட்ட அனைவருக்காகவும் போரடியதால் நாம் இன்று இதுவரை செல்ல முடிகிறது. ஆனால் இன்னும் முழுமையாக மாறவில்லை என்பதால் அடுத்த தலைமுறைக்காக நாமும் போரடிக்கொண்டிருக்கிறோம்.

ஆராய்ச்சியில் பெண்கள் 1950-ல் ஓரிருவர் மட்டுமே இருந்தனர் 1990 களில் 10 சதம் உயர்ந்தது. 2000 - ல் சற்று உயர்ந்தது. இந்த உயர்வு பெரியார், அம்பேத்கர், காமராசர் போன்றோர்களால் சாத்திய மாயிற்று. ஆனால் மீண்டும் இவை அனைத்தும் இளங்களை, முதுகலைப் பட்டப் படிப்புகளோடு நின்றுவிட்டது. முதுகலையிலிருந்து ஆராய்ச்சி யாளர்களாக 25%-30% மும், ஆராய்ச்சியாளர்களி லிருந்து விஞ்ஞானி அல்லது ஆசிரியர்களாக 10 % க்கு குறைந்தவர்களாகவே இன்னும் இருக்கின்றனர்.

இந்தக் குறைபாடு முதுகலைப் பட்டதாரிகள் வேலைக்கோ அல்லது ஆராய்ச்சிக்கோ வராமல் திருமண வாழ்க்கையில் திணிக்கப்பட்டுவிடுவதால், விருப்பத்துடனோ ஏற்றுக்கொள்வதால் இந்நிலை உருவாகிறது.

தாராபுரம் **பூங்கொடி**

# நந்தினியைத் தண்டித்த சமுதாய ‘மனு’ நிலை

ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்கமுள்ளவர்களாக் இருத்தல் அவசியம். ஒழுக்க மென்பதோ, கற்பென்பதோ ஆண் - பெண் இரு பாலருக்கும் சொந்தமானதேயன்றி பெண்களுக்கு மட்டுமல்ல. இன்றைய சீர்கேடான நிலைக்குப் பெண் மக்கள் மிருகங்களிலும் கேவலமாக கருதப் பட்டதும், அவர்கள் பிள்ளை பெறும் இயந்திரங் களாக எண்ணப்பட்டதும், மனித ஜென்மத்துக்கும் பெண்களுக்கும், சம்பந்தமே இல்லையென ஆண்கள் மதித்து வந்ததும், இவை களின் சவுகரியத்தினால் இவன் ஒழுக்க மென்பதை விட்டு விட்டு நாளாவட்டத்தில் வெகு தூரம் விலகி, அதற்கும் இவனுக்கும் சம்பந்த மில்லாது இன்று வாழ்வதுமே காரணமாகும்.

*- ஈரோட்டில் 08.12.1929ல் சொற்பொழிவு- குடி அரசு 22.12.1929*

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நந்தினி என்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சகோதரி, அதே ஊரைச் சேர்ந்த ஆதிக்கச் சாதியைச் சார்ந்தவனும், இந்து முன்னணியைச் சேர்ந்தவனுமான மணிகண்டன் என்ற மனித மிருகத்தைக் காதலித்து, கருவுற்று பின் அவன் மற்றும் அவனுடைய கூட்டாளிகளால் வன்புணரப்பட்டு, மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப் பட்டார்.

சமூக இயக்கங்களின் தொடர் போராட்டத் - தின் விளைவாக கொலைகாரனும் அவன் கூட்டாளி களும் கைது செய்யப்பட்டனர். இது சம்பந்தமாக நடந்த ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் கலந்து கொண்ட நிர்மலா பெரியசாமியும், ஆர்.எஸ்.எஸ். ‘சிலீப்பர் செல்லும்’, பார்ப்பன சமூக ஆர்வலருமான பானுகோம்ஸ் கலந்து கொண்டு, பாதிக்கப்பட்ட பெண் சார்பாகப் பேசாமல், அந்தப் பெண்ணின் வளர்ப்பையும், பெற்றோர் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணின் நடத்தையும்தான் காரணம் என்று கேவலமாகப் பேசினார்கள்.

இந்த நூற்றாண்டிலும் பெண்கள் எங்கேயும் செல்லாமல் வீட்டிலேயே அடங்கியிருக்க வேண்டு மென்றும், வீட்டைவிட்டு இரவு நேரங்களில் வெளியே செல்லும் பெண்கள் தகுந்த பாதுக் காப்புடன் செல்ல வேண்டுமென்கிறார்கள். மேலும் அவர்களைப் போன்றவர்கள் இந்தச் சமூகத்தில் மிகவும் பாதுக்காப்பாக இருப்பது போலவும், பாதிக்கப்படும் பெண்கள் அனைவரும் ஒழுக்க மில்லாமலும், வளர்ப்பு சரி இல்லாமல் இருப்பதே காரணம் என்றார்கள். மேலும் காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்ததாகவும் கூறினார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் விவாதத்தில் நிர்மலா பெரியசாமி அவர்கள் நான் பெண் சுதந்திரத்தை மிகவும் விரும்புகிறவர் என்றும் நடைமுறையில் அதைக் கடைப்பிடிப்பவர் என்றும் ஆனாலும் நான் ஒரு பெண்ணியவாதி அல்ல என்றும் கூறினார். இதில் ஒரு செய்தி உண்மைதான்.

நிர்மலா பெரியசாமி அவர்கள் முதன் முதலாகத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப் பாளராக இருந்த போது ஒரு வாரஇதழுக்கான நேர்காணலில் “ நான் இரவு தூங்கும் போது தாலியைக் கழட்டி வைத்துவிட்டுத் தான் தூங்குவேன்” என்று கூறியிருந்தார். அதற்கு ஆண்கள், பெண்கள் என இரண்டு பக்கத்திலிருந்தும் எதிர்ப்பு வந்தது. அதற்காக அவர் தன் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அவரின் பேச்சு அவர் மேல் ஒரு நல்ல மரியாதையை ஏற்படுத்தியது. அவரின் துணிச்சலுக்கு அவர் வேலை பார்த்த நிறுவனத்தின் அரசியல் பின்புலம் தான் காரணம். அப்போதும் பார்ப்பனக் கூடாரம் தான் அவர்மீது கல்வீசியது.

காலப்போக்கில் இவரின் நிறம் மாறி, தொலைக்காட்சியில் கட்டப்பஞ்சாயத்து நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கும் போதே பெண்கள் எப்போதும் ஆண்கள் சார்ந்து தான் இருக்கவேண்டு மென்றும், குடும்பம் என்கிற அமைப்பு பெண்களால் உடைபடாமல் இருக்க வேண்டும் (ஆண்கள் எவ்வளவு கேவல மானவர்களாக இருந்தாலும்), சாதிய அமைப்பு முறை அப்படியே இருக்க வேண்டும் என்றும் கூறிவந்தார். இந்த ‘மனு’ மன நிலைதான் பெண்களுக்கெதிராக, ஆணாதிக்க, சாதியவாதி களைப் போல் நஞ்சை கக்கச் செய்கிறது.

“எக்காலமும் மாதர் சுவாதினமுடையவர் அல்லர்; சுதந்திரம் உடையவர் அல்லர்” (மனுஸ்மிருதி- 3ம் பாகம்). மனுவுக்கும் இதே கருத்தை வலியுறுத்தும் பழமைவாதிகளுக்கும் பெரிய வேறுபாடில்லை. சகோதரி நந்தினி விசயத்தில் முதலில் அவர் பெற்றோர் சரியில்லை என்றும், ஒரு அயோக்கியன் காதல் என்ற பெயரில் நந்தினியின் பின்னால் சுற்றியதையும் கண்காணிக்கவில்லை என்றும் அதனால் கருவுற்றதையும் அறியவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

இதில் எந்த ஒரு இடத்திலும் கூட்டு வன் புணர்வு செய்து அந்த இளம் பெண்ணைக் கொடூர மாகக் கொலை செய்த அந்தக் காட்டு மிராண்டி களை அம்பலப்படுத்த மறுத்துவிட்டார். நந்தினி மீது இவர் வைத்த விமர்சனங்களை விட, இந்தக் கொலை யாளிகளுக்கு இவர் காட்டிய பரிவுதான் நிகழ்ச்சி நடத்திய நெறியாளரையும் வெட்கப் படவைத்து விட்டது. நந்தினி விசயத்தில் அவரின் நடத்தையும்,

அவரின் குடும்பத்தையும் குறை சொல்லும் இவர், சமீபத்தில் சென்னையில் 7 வயது ஹாசினி என்ற குழந்தை ஒரு காமுகனால் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். இதற்கும் அந்தக் குழந்தையின் வளர்ப்பு தான் காரணம் என்று சொல்வாரா? அல்லது அந்தக் குழந்தையின் நடத்தைதான் காரணம் என்று சொல்வாரா?.

## பெண்களுக்கு எதிரான சட்டங்கள்

மத்திய கிழக்கு மற்றும் ஆப்ரிக்க நாடுகளின் ஒரு சில பகுதிகளில் ஒரு பெண்ணை வன்புணர்வு செய்தவன் அப்பெண்ணையே திருமணம் செய்து கொண்டால் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று அந்நாட்டின் நீதிமன்றங்கள் 475 படி தீர்ப்பளித்தன. (ஆர்டிகல் 475 ன் படி திருமணம் இல்லாத உறவில் ஒரு பெண் ஈடுபடும்போது அது பாலியல் வன்புணர்வாகவே இருந்தாலும் அவள் தனக்கும் தன் குடும்பத்திற்கும் தலைக்குனிவை உண்டாக்கி விட்டதாகவே கருதப்படுவாள்) இந்தச் சட்டத்தால் வற்புறுத்தித் திருமணம் செய்து வைக்கப் பட்ட ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டப்பின் அச்சட்டம் ரத்து செய்யப்பட்டது..

இவ்வாறே லெபனான் நாட்டு சட்டத்தின் 522 இதையே வலியுறுத்துகிறது. இந்தச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி அந்நாட்டின் மகளிர்அமைப்பு (ABAAD) பல்வேறு முறையில் போராடி வருகின்றது. வன் புணர்வு ஒரு குற்றம். குற்றவாளியை தண்டிப்பதை விட்டுவிட்டு, குற்றவாளியையே பெண் திருமணம் செய்து கொள்ளச் செய்யும் சட்டத்தை ரத்து செய்யச் சொல்லி அவ்வமைப்பு போராடுகிறது.

ஆந்திரப்பிரதேச சபாநாயகர், தேசிய பெண் களுக்கான பாரளுமன்றம் நடத்திய மாநாட்டில், பெண்கள் மேம்பாடு மற்றும் பெண்களுக்கெதிராக அதிகரித்து வரும் வன்முறைகள் பற்றிய தலைப்பில் பேசும் போது, பெண்களை வாகனங்களுடன் ஒப்பிட்டுப் பேசினார். அதில் பெண்கள் கார்கள் போல வீட்டிலேயே இருந்து விட்டால் எந்த வித அசாம்பாவிதம் ஏற்படாது என்றும், வெளியே செல்லும் போது மிதமான வேகத்தில் சென்றால் குறைவான விபத்துகளும், வேகம் அதிகமாகும் போது விபத்துகள் அதிகரிப்பது மிக இயல்பு என்றார்.

ஆரம்பக் காலங்களில் பெண்கள் வீட்டிலேயே இருந்ததனால், பாலினப் பாகுபாட்டைத் தவிர மற்ற படி பாதுகாப்பாகத்தான் இருந்தார்கள் என்றும், தற்போது பெண்கள் படிக்கிறார்கள், வேலைக்குச் செல்கிறார்கள், பல்வேறு தொழில்கள் புரிவதால் பொதுவெளியில் இயல்பாக இயங்குகிறார்கள். எவ்வளவு தூரம் அவர்கள் பொதுவெளியில் இயங்கு கிறார்களோ, அவ்வளவு தூரம் பாலியல் அச்சுறுத்தல்,அத்துமீறல் மற்றும் கடத்தலுக்கு உள்ளாகிறார்கள். இதைத் தவிர்க்க பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லாமல் இருக்கவேண்டும் என்றார்.

இப்படி பேசியதால் எங்கே பிரச்சனை யாகிவிடும் என்று நினைத்து, சற்றுச் சுதாரித்து, நான் ஒன்றும் பெண்களைப் படிக்கவேண்டாம், வேலைக்குப் போகவேண்டாம் என்று சொல்ல வில்லை, பெண்களுக்கு தற்காப்பு கலைகளைக் கற்றுக் கொடுத்து வீரமாக வளர்க்கவேண்டும் என்றும் வீரம் என்பது தோற்றத்தில் இல்லை. உள்ளத்தில் தான் உள்ளதென்றும், நம்பிக்கை கொடுத்து வளர்த்தால் அவர்கள் பிரச்சனைகளை அவர்களே சரி செய்து கொள்வார்கள் என்று சமாளித்தார். இவ்வாறு பெண்களைப் பற்றி ஆண்கள் எண்ணுவதென்பது இன்று நேற்றல்ல - வேத காலங்கள் என்ற கேடு கெட்ட காலம் ஆரம்பித்ததோ அன்றிலிருந்து இப்படிதான் பேசிக்கொண்ட்டிருக்கிறார்கள்.

## ஆண் வளர்ப்பில் மாற்றம் தேவை

இந்த நிலைமை மாறவேண்டுமென்றால் பெண்களாகிய நாம் தான் முதலில் மாற்றத்தை ஆரம்பிக்க வேண்டும். ஒழுக்கத்தை நம் வீட்டுப் பெண்களுக்கு போதிப்பதை விட, நம் வீட்டு ஆண் பிள்ளைகளுக்கு முதலில் பெண்களிடம் எப்படி நடந்து கொள்வது, பெண்களை புரிந்து கொண்டு, பால் வேறுபாடின்றி பழக கற்றுக் கொடுப்பது போன்ற வேலைகளை ஆரம்பிக்கவேண்டும்.

குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் பெண்களை வெளியே செல்ல வேண்டாம் என்று சொல்வதற்குப் பதிலாக, ஆண்களிடம் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் வெளியே செல்லும் பெண்களிடம் எப்படி கண்ணியமாக நடக்கவேண்டுமென்பதையும் சொல்லித் தரவேண்டும். இரவு நேரங்களில் வயது வந்த தன் மகனை வெளியே அழைத்துச் செல்லவேண்டும். அப்போது தான் பெண்களுக்கு ஏற்படும் தொல்லைகள், பாதுகாப்பின்மை, ஆகியன கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குப் புரியவரும். எதிர்காலங்களில் இந்த மாதிரி வளர்க்கப் பட்ட ஆண்களால் பெண்களுக்குத் தொல்லை ஏற்படாது என்பதை நம்பலாம்.

> “தனி உரிமை உலகில், பெண்கள் சுதந்திரம் வேண்டுமென்பவர்கள் பெண்களை நன்றாய்ப் படிக்க வைக்க வேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்க வேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொடுக்க வேண்டும். தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்கு பிடித்துக் கொடுப்பது என்று இல்லாமல் அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும், தொழிலும் ஏற்பட்ட பிறகு ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் படி செய்யவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் ‘கன்னிகாதானம், கலியாணம், தாரா முகூர்த்தம் என்கின்ற வார்த்தைகளே மறைந்து அகராதியில் கூட இல்லாமல் ஒழிய வேண்டும். அன்று தான் பெண்கள் சுதந்திரம் அனுபவிக்க இலாயக்கு உள்ளவர்களாவார்கள்”

*பெரியார்*
*சொற்பொழிவு, ஈரோடு-22.02.1936*
*குடி அரசு-01.3.1936*

பல்லடம் தீபா,
திருப்பூர் வேணி



# தங்கமும், கூந்தலும், அலங்காரமும் எனது அடையாளமல்ல! எனக்குப் பெருமையுமல்ல !!

## ‘மதுரை மகிழ்’



பெண்கள் தங்களை அலங்காரப் படுத்திக் கொள்வதில் என்ன தேவை இருக்கிறது? பெண்கள் தங்களை அழகுபடுத்தி, அலங்காரப் படுத்திக் கொள்வதினால் அது யாருக்குப் பயன்படும்? பெண்கள் அழகுப்படுத்தப் பட்ட அலங்காரப் பொருளா என்ன? இந்த மாதிரியான கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார் மதுரை தோழர் மகிழ். அவரிடம் ஒரு நேர்காணல்:-

என்னுடைய பெயர் மகிழ். அப்பா பாபுகண்ணன், அம்மா நிர்மலா, நாங்கள் மதுரையில் வசிக்கிறோம். நான் மாகாத்மா பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்துக்கொண்டு இருக்கிறேன்.

**பெண்களுக்கு உரிய அடையாளங்களான ஆடை, அணிகலன், கூந்தல் இவைகளைத் தவிர்த்து வாழக் காரணம் என்ன?**

பெண்களுக்கு அடையாளங்கள் ஆடை, அணிகலன்களோ, கூந்தலோ இல்லை என்று நான் நினைக்கிறேன். பெண்கள் என்ன நகை மாட்டும் ஸ்டாண்டா? என்ற பெரியாரின் வரிகள் என் மனதைக் கவர்ந்தவை. இந்த சிந்தனையோடு நான் எப்படி சராசரி சமூகப் பெண்ணாக வாழமுடியும்? அதனால் தான் அனைத்து விசயங்களையும் சிந்தித்து நகை மாட்டும் ஸ்டாண்டாக நான் வாழ விரும்பவில்லை.

**பெண்கள் அணியும் உடைகளில் பாதுகாப்பான உடை எது? பாதுகாப்பற்ற உடை எது?**

முதலில் தாவணிபாவாடை, சேலை பற்றிப் பேசுவோம். ஒரு பெண் தன்னை தயார்படுத்தி வெளியில் செல்வதற்கு நேரமும்செலவாகிறது. அதுமட்டுமில்லாமல், ஆபத்தும், ஆபாசமும் நிறைந்த உடைகள் இவை இரண்டுதான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இரு சக்கர வாகனங்களில் செல்லும் போதும் பேருந்தில் பயணிக்கும் போதும் ஆடைகளைச் சரி செய்வதிலேயே தன்னுடைய கவனத்தைச் செலுத்தவேண்டியது அவசியமாகிறது.

எனவே இது ஒரு பாதுகாப்பற்ற உடைதான். சரியான உடை என்று சொல்ல வேண்டுமானால் ஆண்கள் அணிவது போல் பேண்ட், சர்ட், டிசர்ட் அணிவதே சிறப்பானதும், பாதுகாப்பானதும் கூட. இப்படி அணிவதினால் நேரமும் வீணாவதில்லை. தேவையற்ற பொருட் செலவுகள் (உடைக்கு ஏற்றது போல் கம்மல், வளையல், பாசி) ஏதும் இல்லை.

**பெண்களுக்குக் கூந்தல்தான் அழகு என்கிறார்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆண்களுக்குக் கூந்தல் இல்லை. ஆனால் அவர்கள் அழகாக இல்லையா? இப்போது எனக்கு கூந்தல் இல்லை. இப்படியிருப்பது எனக்கு மிகவும் சவுரியமாக இருக்கிறது. காலையில் சீக்கிரமாகவே பள்ளிக்குப் போக முடிகிறது. தினமும் தலைக்குக் குளிக்க முடிகிறது. ஆனால், என்னுடைய சக தோழிகள் பள்ளிக்குத் தாமதமாக வருவதற்குக் காரணமே அவர்களுடைய முடிதான். தலைசீவி, சடைபின்னி வருவதால் தாமதம் ஆகிவிட்டது என்று சொல்வார்கள்.

நான் எளிமையான தோற்றத்தில் (Hair cut) இருப்பதனால் எந்த ஒரு இடத்திற்குப்போகும் போதும் சீக்கிரமாகப் போகமுடிகிறது. என்னுடைய பள்ளியில் 8000 பேர் படிக்கிறார்கள். ஒரு போட்டிக்குத் தேர்வு செய்யும் போது முதல் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. அதற்குக் காரணம் என்னுடைய Hair cut,

அலங்கார அணிகலன்களைத் தவிர்த்ததால் இந்த விஷயத்தில் தைரியமாக இருக்கிற பெண் எல்லா விஷயங்களிலும் தைரியமாக இருப்பாள் என்று அவர்களுக்கே என்மேல் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. நான் இப்படி இருப்பதால் எனக்கு முதல் வாய்ப்புதான் கிடைக்கிறது. எந்த இடத்திலும் இழிவு ஏற்படவில்லை. அலங்காரத்தோடும், கூந்தலோடும் இருக்கிற பெண்களுக்குக்கூட 2 வது இடம் தான் கிடைக்கிறது. அதனால் ஒரு பெண்ணுக்கு முக்கியமானது அலங்காரமோ, அணி கலன்களோ இல்லை. பகுத்தறிவு சிந்தனைகள்தான்.

நான் கைப்பந்துப் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டேன் .வயது குறைவாக இருப்பதினால் விளையாட முடியவில்லை. அடுத்த ஆண்டு பெயர்ப் பட்டியலில் என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

கைப்பந்தாட்டத்திற்குத் தினமும் பயிற்சி எடுக்கும் போது என்னுடைய சக தோழிகள் தலை முடி பிரிந்துவிட்டது, ரிப்பன் பிரிந்துவிட்டது என்று அதைச் சரிசெய்வதும், காதில் இருந்த கம்மல் காணாமல் போய்விட்டது என்று தேடுவதுமாக இருப்பார்கள். ஆனால், நான் கூந்தல், அணிகலன்களைத் தவிர்த்ததால் எனக்கு எந்த ஒரு பிரச்சனையும் இல்லை. விளையாட்டில் கவனமாக இருக்க முடிகிறது.

நாங்கள் விளையாடும்போது கூட பந்து காதில் பட்டுவிடுமோ, என்று அலங்காரம் செய்து கொண்ட பெண்கள் அதைப் பாதுகாப்பதாகவே இருப்பார்கள். ஆனால், எனக்கு எந்த விதமான பிரச்சனையும் இல்லை.

முடி வளர்ப்பதால் நம் பெண் சமூகத்திற்கு முன்னேற்றம் முற்றிலும் தடைபடுகிறது. எப்படியெனில் ஒரு பெண் முடிவளர்க்கும் போது அதனை அலங்கரிக்க, தன்னுடைய நேரம் மட்டும் இல்லாமல் தன்னுடைய தாயின் நேரத்தையும் சேர்த்து செலவிடவேண்டியுள்ளது. இதனால் இரண்டு பேரின் நேரமும் வீணாகிறது. ஆகவே நாம் வளர்க்க வேண்டியது கூந்தல் அல்ல கல்வி. அறிவியல், பகுத்தறிவு இவைகளைத்தான் நாம் வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

**அலங்காரம், அணிகலன்களைத் தவிர்த்தது உங்களின் விருப்பமா? பெற்றோரின் விருப்பமா?**

இது என்னுடைய விருப்பம்தான். நான் பெரியாரியல் புத்தகங்களை வாசிக்கும்போதும், கூட்டங்களுக்குப் போகும் போதும் ஆடை, அணிகலன், கூந்தல் இவைகளை ஏன் தவிர்க்கணும் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய பெற்றோருடன் கலந்து உரையாடும்போதும் இவைகளைத் தவிர்ப்பதின் அவசியங்களை அறிந்தேன். ஒரு சில நிகழ்ச்சிகளுக்குப் போகும்போது கூட என்னுடைய பாட்டி, சித்தி இவர்கள் அனைவரும் நிறைய நகை அணிந்து கொண்டுதான் வருவார்கள். ஆனால், என்னுடைய அம்மா மிகவும் எளிமையான தோற்றத்தில்தான் வருவார். நான் என்னுடைய அம்மாவிடம் கேட்டேன் நீங்கள் மட்டும் ஏன் எளிமையான தோற்றத்தில் இருக்கிறீர்கள் என்று, அதற்கு என்னுடைய அம்மா விளக்கம் கொடுத்தார். அப்போதுதான் நான் அடிமைத்தனம் இல்லாமல் இருக்கவேண்டும் என்று நினைத்தேன். அதனால் நான் என்னை மாற்றிக்கொண்டேன்.

**உங்களுடைய நண்பர்களோ இல்லை உறவினர்களோ, இந்த வாழ்க்கை முறையை எப்படிப் பார்க்கிறார்கள்?**

என்னுடைய உறவினார்கள் எதுக்கு இப்படி முடியை வெட்டி இருக்கிறாய்? முடி இருந்தால் உனக்கு அழகாக இருக்கும் என்று சொல்வார்கள். ஆனால், என்னுடைய பாட்டியே மற்றவர்களிடம் சொல்லும்போது என்னுடைய பேத்தி மாதிரி முடியை வெட்டி விடுங்கள். பள்ளிக்குச் செல்வதற்கும் காலையில் தலைக்கு குளிப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று சொல்வார்.

**அலங்கார அணிகலன்களைத் தவிர்த்ததால் இந்த விஷயத்தில் தைரியமாக இருக்கிற பெண் எல்லா விஷயங்களிலும் தைரியமாக இருப்பாள் என்று அவர்களுக்கே என்மேல் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. நான் இப்படி இருப்பதால் எனக்கு முதல் வாய்ப்புதான் கிடைக்கிறது. எந்த இடத்திலும் இழிவு ஏற்படவில்லை.**

**ஒட்டு மொத்த பெண் சமூகமே வேறுவிதமான வாழ்வியலைக் கடைபிடிக்கும்போது உங்களுடைய மாற்றத்திற்கு என்ன நோக்கம்?**

பொதுவாகவே பெண்கள் என்றாலே எதுக்கு அதிகமாக படிக்க வைக்க வேண்டும்? எப்படியிருந்தாலும் திருமணம் முடிந்து வேறு வீட்டுக்கு போகிறவள் தானே? ஏதோ எழுத, படிக்கத் தெரிந்தால் போதும் அதிகப்படியான படிப்பைப் படிக்க வைத்துச் செலவு செய்யாமல் அந்தப் பணத்தை வைத்துத் திருமணம் செய்து வைத்துவிடலாம் என்று நினைப்பார்கள். இதுதான் பெண்களுடைய சாதாரணமான வாழ்க்கை. நான் இந்த வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்டு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். கல்வி, விளையாட்டு போன்ற எல்லாவற்றிலும் கலந்து கொண்டு ஒரு பெண்ணாலேயும் இப்படி இருக்க முடியும் என்று காட்டவேண்டும். ஒரு சராசரிப் பெண்ணாக இல்லாமல் ஒரு திறமைசாலியாகவும், புத்திசாலியாகவும் தைரியமான பெண்ணாக பெரியார் சொன்னதுபோல் வாழ வேண்டும் என்று நினைக்கிறேன்.

**திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிகளில் அலங்காரம் மற்றும் அழகுசாதனப் பொருட்களுக்காகவே பெண்கள் படைக்கப்பட்டதாக காட்டுகிறார்களே இதைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

ஒரு மாதத்திற்கு முன்பு 'காளை' என்ற விலங்கினைக் காட்சிப்படுத்தப்பட்ட பட்டிய லிருந்து நீக்க வேண்டும் என்று ஒரு போராட்டமே நடந்தது. ஆனால், பலநூற்றாண்டு களாகப் பெண்கள் காட்சிப் படுத்தப்பட்ட பொருளாகத் தான் இருக்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டாலே பெண்சமூகம் முன்னிலையில் இருக்கும்.

ஒரு விளம்பரத்தைப் பார்த்தால் அழகு கிரீம்கள், சோப்பு, பவுடர்கள் என்று பெண்களை மையப்படுத்தியே விளம்பரங்கள் எடுக்கப் படுகின்றன . சேவிங் கிரீம், வாசனைப் பொருட்கள் (Spray) இவைகளைப் பயன்படுத்தினாலே ஆண்கள் பின்னே பெண்கள் போகிறார்கள் என்று பெண்களை மிகவும் கேவலமாகச் சித்தரித்துக் காண்பிக்கிறார்கள். இப்படி ஓர்ஆணுக்கான விளம்பரத்தில்கூட பெண்கள்தான் வருகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். அப்போதுதான் பெண் சமுதாயம் முன்னேறும்.

**பொதுவாகவே பெண் என்றாலே ஒரு சின்னக் குண்டுமணி அளவாவது தங்கம் போட்டிருக்க வேண்டும் என்கிறார்களே!**

ஒரு பெண் வந்து ஒரு ஒலிம்பிக்கிலோ அல்லது மாநில அளவிலோ, மாவட்ட அளவிலோ ஒரு விளையாட்டுத்துறையில் சாதனை செய்து தங்கப்பதக்கம் வாங்கிக் கொண்டு வரவேண்டும். அந்த மாதிரியான ஒரு குண்டுமணித்தங்கம் தான் வாங்க வேண்டுமே தவிர கழுத்து, காதுகளில் போடுவது தேவையற்றது என்று நினைக்கிறேன்.

**பெண்கள் விளையாட்டுத் துறையில் பின் தங்கியிருக்கக் காரணம் என்ன?**

அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று சொல்வார்கள். இப்படிப் படிப்பிலேயே மட்டம் தட்டும்போது அவர்களை விளையாட்டுத் துறைக்கு அனுமதிப்பது கிடையாது.

நான் L.K.G. படிக்கும் போது இருந்து 5 -ஆம் வகுப்பு படிக்கின்ற வரைக்கும் 10 ஆண்கள், 10 பெண்கள் சேர்ந்து விளையாடுவோம். ஆனால், இப்பொழுது 10 பெண்களில் 9 பேர் விளையாடு வதற்கு அவர்களுடைய வீடுகளில் அனுமதிப்பது கிடையாது.

**ஒரு பெண் முடிவளர்க்கும் போது அதனை அலங்கரிக்க, தன்னுடைய நேரம் மட்டும் இல்லாமல் தன்னுடைய தாயின் நேரத்தையும் சேர்த்து செலவிடவேண்டியுள்ளது. இதனால் இரண்டு பேரின் நேரமும் வீணாகிறது.**

பள்ளிக்குப் போவதும் பள்ளி முடிந்தவுடன் வீட்டிற்குள் முடங்கியிருப்பதுமாக இருக்கிறார்கள். ஆனால், எனக்கு இப்போது 13 வயது ஆகிறது. நான் இப்பவரைக்குமே எல்லா ஆண்களோடும் விளையாடிக்கொண்டுதான் இருக்கிறேன். இப்ப இருக்கிற பெண்குழந்தைகளை இப்படி வீட்டில் அடிமைப்படுத்தி வைத்திருப்பதால் இவர்கள் எப்படி விளையாட்டுத்துறையில் சாதிக்கமுடியும்? இந்தநிலைமாறவேண்டும். அப்போதுதான் இனிவரும் காலங்களில் பெண்களின் பங்கீடு அதிகமாக இருக்கும்.

**உங்களுடைய வாழ்க்கையின் லட்சியம் என்ன?**

ஒரு அலங்கார அணிகலன்களைப் போட்ட - கூந்தல் உடைய அடிமைப்பெண்ணாக இல்லாமல் ஒரு பகுத்தறிவுச் சிந்தனையுள்ள ஒரு பெண்ணாக வாழ விரும்புகிறேன்.

என்னுடைய முதல் இலட்சியம் மாவட்ட ஆட்சியாளராக ஆகவேண்டும் என்பதே. அதாவது யாரும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு ஒரு பெண்ணால் இப்படி இருக்க முடியுமா? என்று சிந்தனை கூடப் பண்ணமுடியாத ஆட்சியாளராக இருந்து சாதனை படைக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

## மகிழ் பெற்றோர்களிடம் கேள்விகள்:

**இந்திய மற்றும் தமிழ்க் கலாச்சாரங்களில் பெண்கள் கூந்தல் வளர்ப்பதையும் நகை அணிவதையும் கொண்டாடும்போது நீங்கள் அதற்கு மாறாக உங்கள் மகளை வளர்க்க என்ன காரணம்?**

எங்களுடைய திருமணமே பெரியாரின் கொள்கைப்படி சுயமரியாதைத் திருமணம்தான். நாங்கள் பெரியாரின் வாழ்வியலை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அதனால், எங்களுடைய குழந்தையை பெரியாரின் கொள்கைப்படிதான் வளர்க்கவேண்டும் என்று முடிவு செய்தோம். மனுசாஸ்திரம் பெண்களை மிகவும் இழிவாகக் கூறுகிறது. பெண்கள் படுக்கை, ஆசனம், அலங்காரங்களுக்கு ஆசைப்படுவார்கள். காம குரோதங்களுக்கு வசப்பட்டிருப்பார்கள். செய்யத்தகாததைச் செய்பவர்களாகவும் துரோக பாவத்தோடும் இருப்பார்கள் (அத்தியாயம் 8, சுலோகம்-17)இந்த மனுசாஸ்த்திரப்படி இல்லாமல் இந்து மதசாஸ்திரத்திற்கு எதிராகவும் - பகுத்தறிவு உடையவராகவும் எங்கள் மகளை வளர்க்க முடிவு செய்தோம்.

**உங்கள் மகளை இப்படி வளர்ப்பதால் இந்த சமூகத்தில் நீங்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் என்ன?**

நாங்கள் நிறைய பிரச்சனைகளைச் சந்தித்து இருக்கிறோம். ஒரு பெண் என்றால் நிறைய கூந்தல் இருக்கணும். நிறைய அணிகலன் அணிந்து இருக்கணும். ஒரு பெண்ணைப் பெண்ணாக வளர்க்கணும். ஆண் பிள்ளையைப்போல் வளர்க்கக் கூடாது என்று நிறையப் பேர் சொல்வார்கள். ஆனால், நாங்கள் எங்களுடைய பெண்ணை இப்படித்தான் வளர்க்க வேண்டும் எனபதில் உறுதியாக இருந்தோம்.

ஆடைகளை வைத்தோ, கூந்தலை வைத்தோ அவள் மதிக்கப்படத் தேவையில்லை. அவளுடைய வளர்ச்சியாலும், அறிவினாலும் மதிக்கப்படணும்

என்று நினைத்தோம். இப்பவும் நிறைய விஷயங்களை மகிழ் புரிந்து கொண்டு அதன்படி நடக்கிறாள். ஆரம்பத்தில் பெயர் வைப்பதிலேயே பிரச்சனை ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அடையாளம் இல்லாமல் பொதுப் பெயர் வைக்கணும் என்று பெரியார் வலியுறுத்தி யிருப்பார்.

அந்தச் சொல் எனக்கு மிகவும் பாதிப்பாக இருந்தது. என்னுடைய மனைவி 5 மாதக் கர்ப்பிணியாக இருக்கும்போது பிறக்கப்போவது ஆணா,பெண்ணா என்று தெரியாத போதே நமக்கு எந்தக் குழந்தை பிறந்தாலும் **'மகிழ்'** என்று பெயர் வைக்க முடிவு செய்தோம். அப்போதும்கூட எங்களுடைய உறவினர்கள் வெறும் மகிழ் என்று இருக்கக்கூடாது **'மகிழ் ஓவியா'** என்று இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன்பின்பு என்னுடைய அம்மா, அப்பா ஒரு பெயர் சொல்லி மகிழை அழைத்தார்கள்; நிர்மலாவின் அம்மா, அப்பா ஒரு பெயரைச் சொல்லி அழைத்தார்கள்; அதை எல்லாம் உடைத்து மகிழ் என்ற பெயரை நிலை நிறுத்தினோம்.

அதன்பிறகு முடி வெட்டுவது. 5 ஆம் வகுப்பு வரை முடி வெட்டிக்கொண்டு இருக்கும்போது பள்ளிக்கூடத்திற்குச் சீக்கிரமாகப் போகட்டும் என்று இருந்தார்கள். ஆனால், அதன்பிறகு இப்ப மகிழ் பெரிய பெண் ஆகிட்டா அதற்கு சடங்கு, சம்பிரதாயங்கள் எல்லாம் செய்யவேண்டும். அதற்கு முடி வளர்க்கணும். இப்படி இருந்தால் குடும்பத்திற்கு நல்லது அல்ல. நிறைய பேர் வருவாங்க. அந்த நேரத்தில் நாம் இப்படியிருப்பது சரியில்லை என்று சொன்னார்கள்.

**'காளை' என்ற விலங்கினைக் காட்சிப்படுத்தப் பட்ட பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என்று ஒரு போராட்டமே நடந்தது. ஆனால், பல நூற்றாண்டுகளாகப் பெண்கள் காட்சிப் படுத்தப் பட்ட பொருளாகத்தான் இருக்கிறார்கள். இதிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டாலே பெண்சமூகம் முன்னிலையில் இருக்கும்.**

ஆனாலும் மகிழ் பெரிய பெண்ணாவதைச் சாதாரண நிகழ்வாகத்தான் பார்க்கிறோம். எந்த ஒரு சடங்கு, சம்பிரதாயங்கள் செய்யப்போவதுமில்லை. இருந்தாலும் இந்தச் சமூகம் இனிமேலும் முடி வளர்க்காமல் இருப்பது நல்லதல்ல என்று சொல்கிறார்கள். முடி இல்லாமல் இருப்பது வசதியாக இருக்கிறது. எளிமையாக இருக்கிறது என்பதையும் தாண்டி - சமூகத்தில் ஒரு பிரச்சனை யாக இருக்கிறது. எந்த ஒரு பிரச்சனையும் நாம் எடுத்துச் சொல்வதின் மூலமாகத்தான் நாம் அவர்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டி யிருக்கிறது. எந்த ஒரு கட்டாயத்திற்கும் நாங்கள் உட்படவில்லை. எங்களுடைய முறைகளில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

**உங்களுடைய மகளை அலங்காரம், அணிகலன் தவிர்த்து உருவாக்கியதால் என்ன நன்மை?**

எங்களுக்கு வீண் பொருட்செலவு இல்லை. எங்களுடைய குழந்தைக்கு பூ, பொட்டு, வளையல் அந்த மாதிரி எதுவும் நாங்கள் வாங்கியதே இல்லை. ஒரு ஆண் குழந்தைக்கு பேண்ட், சர்ட் வாங்கிக் கொடுத்துவிட்டால் போதும். ஆனால், ஒரு பெண் குழந்தைக்கு உடைக்குத் தகுந்த மாதிரி பூ, தோடு, வளையல், பாசி எல்லாம் வாங்கித்தரவேண்டும். போகின்ற இடங்களில் எல்லாம் இவற்றை வாங்கி வாங்கி சேகரிப்பது இந்த மாதிரியான செலவுகள் எங்களுக்கு எதுவும் இல்லை.

மகிழிடம் பெண் உடுத்துகின்ற உடைகள் என்று எதுவுமே இல்லை. ஒரு ஆண்பிள்ளைக்கு உண்டான உடைகள் மட்டுமே இருக்கின்றன. என்னுடைய கணவருக்கும், மகிழுக்கும் உடைகள் ஒரே மாதிரியாகத்தான் எடுக்கிறோம். அளவுகள் மட்டுமே சற்று மாறுபட்டு காணப்படும். தங்க ஆபரணங்கள் மகிழ் போட்டது கிடையாது. போட்டிகளில் கலந்து கொள்வதினால் நிறைய இடங்களுக்கு போக வேண்டியுள்ளது. இப்படி வெளியே அனுப்பும்போது எங்களுக்கு எந்த ஒரு பயமும் இல்லை. நகை அணிந்து கொண்டு போவதினால் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்கிற பயம் இல்லை.

**உங்களது வாழ்க்கைமுறையைப் பார்த்து உங்கள் உறவினர்கள் யாராவது அதைப் பாராட்டி இருக்கிறார்களா? பின்பற்றி இருக்கிறார்களா?**

குழந்தை பிறந்ததற்குப் பிறகு புண்ணியதானம் பண்ணனும் என்று சொன்னார்கள். புண்ணிய தானம் என்பது குழந்தை பிறந்து 30 நாட்களில் செய்து தீட்டு கழிப்பது. பிறந்த குழந்தையே ஒரு தீட்டு என்றால் நாங்களும் தீட்டுதானே? நாங்கள் வேண்டுமானால் எங்களுடைய வீட்டுக்குக் குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விடுகிறோம் என்று சொன்னோம்.

அதற்கு நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம் நாங்கள் செய்கிறோம்.அப்படி செய்யாவிட்டால் பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள் நம்முடைய வீடுகளில் வந்து யாரும் சாப்பிடமாட்டார்கள் அதனால்தான் சொல்கிறோம் என்றார்கள். அந்தப் புண்ணியதானம் செய்வதற்கு மறுப்பு தெரிவித் தோம்.

அந்த முறையிலேயே எங்களுடைய வீட்டிலும், என்னுடைய மனைவி வீட்டிலும் சேர்த்து 10 குழந்தைகள் பிறந்து இருக்கிறது. இந்த 10 குழந்தைகளுக்குமே புண்ணியதானம் என்கிற சடங்குகள் மறுக்கப்பட்டு இருக்கிறது. இதுவே எங்களுக்கு ஒரு பெரிய வெற்றியாகக் கருதுகிறோம்.

அதுமட்டுமில்லாமல் பெயர் வைக்கும்போது என்னுடைய பெயர் பாபுகண்ணன், துணைவியார் நிர்மலா, எங்களுடைய குழந்தைக்கு **'நி.பா.மகிழ்'** என்று எங்கள் இருவரின் முதல் எழுத்தை இன்சியலாக வைத்தோம். இதனுடைய தாக்கம்

என்னவாக இருக்கிறது என்றால் என்னுடைய தம்பியுடைய குழந்தைகள், நிர்மலாவின் தங்கையின் குழந்தைகள் மற்றும் நண்பர்கள் அனைவரும் நல்ல விஷயம்தானே நாமும் இப்படி இன்சியல் வைக்கவேண்டும் என்று எல்லாக் குழந்தைகளுக்கும் இரண்டு இன்சியல் உள்ளது. அது அம்மா, அப்பாவின் பெயரின் முதல் எழுத்தாக உள்ளது.

மகிழுக்கு எந்த ஒரு இந்து மத சடங்குகளும் இதுவரை நாங்கள் செய்யவே இல்லை. குழந்தை பிறந்து புண்ணியதானத்தில் இருந்து காதுகுத்து, சடங்கு என்று எதுவும் நாங்கள் செய்யவில்லை. ஒரு பெரியாரியல்வாதியாக இருந்து சடங்குகளைச் செய்யாமல் இருப்பது ஒரு சாதாரணமான விஷயம்தான்.

இது ஒரு சமூகமாக நம்மைச் சார்ந்தவர்களின் குடும்பங்களில் நடக்கின்ற நிகழ்வுகளைப் பார்க்கும்போது இதை யார் முன்னெடுப்பது என்பதற்கு முன்னாடி இதை நாங்கள் எடுத்துக் கொண்டு போகிறோம். நாங்கள் எங்கள் குழந்தைக்குக் காது குத்தாததினால் எங்களுடைய வீடுகளில் இதை ஒரு சடங்காக, நிகழ்ச்சியாக எந்த ஒரு குழந்தைக்கும் செய்யவில்லை.

அதுவே ஒரு பெரிய வெற்றி. மகிழ் பெரிய பொண்ணு ஆகி ஒரு வருடம் ஆகிவிட்டது. ஆனால், எங்களுடைய வீடுகளில் யாருக்கும் தெரியாது. ஆனால், அவர்கள் அனைவரும் எப்படியிருந்தாலும் பெரிய பொண்ணு ஆனா சடங்கு செஞ்சுதான் ஆகவேண்டும். எந்த விஷயங்களைச் செய்யாமல் இருந்தாலும் இதை எங்களுக்குத் தெரியாமல் மறைக்கவே முடியாது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அதுக்குமே நாங்கள் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. இதை ஒரு விஷேசமாக கொண்டாடத் தேவையில்லை. இது ஒரு இயற்கைக் கழிவு வெளியேற்றம்தான். மகிழ் பெரிய பெண் ஆனவுடன் ஒரு பெண்மருத்துவரை அணுகி மகிழுக்குத் தேவையான சத்து மாத்திரைகள் வாங்கிக் கொடுத்தோம். மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்தோம்.

இது ஒரு சாதாரணமான நிகழ்ச்சியாகத்தான் பார்க்கிறோம். இதைப் பார்த்து என்னுடைய சகோதரனின் வீடுகளிலோ, இல்லை சமூகத்தின் பிள்ளைகளிலோ மாறுதல் வரும் என்று எதிர்பார்க்கிறோம். எங்களைப் பார்த்து நாலுபேர் செய்கிறார்கள். அதற்கு மகிழ் ஒரு முன் உதாரணமாக இருப்பது எங்களுக்கு சந்தோசமாக இருக்கிறது.

**இன்றைய சமூகச் சூழலில் பெண் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

விளையாட்டு, அரசியல் போன்ற எல்லா வற்றையும் பெண்களுக்கு முழுக்க, முழுக்க கற்றுக் கொடுக்கவேண்டும். இந்தியாவில் ஒலிம்பிக்கில் பெண்கள் கலந்து கொள்கின்ற விகிதம் அதிகமாக இருக்கவேண்டும். அதற்கு பெண் குழந்தைகளை அடிப்படையிலேயே ரோடுகளில் விளையாடுவதற்கு அனுமதிக்கவேண்டும். நீங்கள் ரோடுகளில் விளையாடுவதை அனுமதிக்காத போது அந்தக் குழந்தை எப்படி ஒலிம்பிக்கில் விளையாடும்?

பெண்களுக்கு பாலியல் தொந்தரவுகள் மிகவும் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பெண் எப்படி தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்கவேண்டும். அதற்குத் தற்காப்பு, ஆயுதப்பயிற்சிக் கலைகளைக் கற்றுக்கொண்டு தன்னை மேம்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**பாலியல் கல்வி என்பதையும், பாலியல் சமத்துவம் பற்றியும் பெற்றோர்களாகிய நாம்தான் கற்றுக் கொடுக்க வேண்டும். எந்த எந்த காலகட்டத்தில் எப்படியிருக்க வேண்டும் என்பதை அறிவியல் பூர்வமாக விளக்கவேண்டும்.**

பாலியல் சம்பந்தமான விஷயங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். பாலியல் சம்பந்தமான அறிவை நாம் பேசாமல் மறைப்பதினால் நம் குழந்தைகள் பாலியல் தொந்தரவுகளால் பாதிக்கப்படுகிறார்கள். பாலியல் கல்வி என்பது அவசியமானதாக இருக்கிறது. நமது கல்வி முறைகளில் பாலியல் கல்வி என்பதை ஒரு பாடத்திட்டமாகக் கொண்டு வந்தால் இன்று நடக்கும் பாலியல் பலாத்கார சம்பவங்கள் எதிர் காலங்களில் நடக்காமல் போகலாம்.

ஒரு ஆணை வளர்த்தாலும் பாலியல் என்றால் என்ன? என்பதைத் தெரிவிக்கவேண்டும். ஓர் ஆண் தவறான முறையில் வளர்க்கப்படுவதினால் தான் பெண் பாதிக்கப்படுகிறாள் என்பதை நாம் ஆண் குழந்தை வைத்திருப்பவர்களுக்கும் வலியுறுத்த வேண்டும். பாலியல் சம்பந்தமான விஷயங்களை இந்தியக் கல்விமுறை இன்னும் கொடுக்கவில்லை. பாலியல் கல்வி என்பதையும், பாலியல் சமத்துவம் பற்றியும் பெற்றோர்களாகிய நாம்தான் கற்றுக் கொடுக்க வேண்டும். எந்த எந்த காலகட்டத்தில் எப்படியிருக்க வேண்டும் என்பதை அறிவியல் பூர்வ மாக விளக்கவேண்டும். இன்றைய குழந்தைகளுக்கு நல்ல கல்வி முறையையும், எந்த இடத்திற்கும் தனியாக சென்று வருகின்ற தைரியத்தையும், தற்காப்பையும் கற்றுக்கொடுத்து வளர்க்க வேண்டும்.

**"பெண்கள் மதிப்பற்றுப் போவதற்கும்,அவர்கள் வெறும் போகப் பொருள்தான் என்று ஆண்கள் கருதி நடப்பதற்கும் முக்கியக் காரணமே பெண்கள் ஆபாச மாகத் தங்களைச் சிங்காரித்துக் கொள்வதே யாகும்"**

*தோழர் பெரியார் - விடுதலை - 15.06.1943*

**தங்களை நாகரிகப் பெண்மணிகள் என்று கருதிக்கொள்ளும் பெண்கள் எல்லாம் கூட நல்ல முறையில் ஆடை, அலங்காரம் செய்துக்கொள்வ தையும் நைசான நகைகள் போட்டுக் கொள்வதையும் பவுடர் பூசிக்கொள்வதையும்தான் நாகரிகம் என்று கருதி வருகிறார்களே தவிர ஆண்களுக்குச் சரி நிகர் சமமாக வாழ்வதுதான் நாகரிகம் என்பதை உணர்ந்திருக்க வில்லை.**

*தோழர் பெரியார் - விடுதலை - 11.10.1948*



# இராசாளிகள்

**சுபா**
அண்ணா பல்கலைக்கழகம்



இன்றைய காலகட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருவதற்கான பல சான்றுகளைக் கண்டு வருகிறோம். அதில் முதலாவதாக வருமானம் ஈட்டுவதற்கான தேடலில் ஆணுக்கு நிகராகப் பெண்கள் வளர்ந்து வருகின்றனர்.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்ற சான்றோரின் வாக்கினை இன்றைய பெண்கள் பொய்ப்பிக்கும் வகையில் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெற்று வருகின்றனர். இதற்குச் சான்றாக, கடந்த மாதம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து ஏவப்பட்ட பி.எஸ் எல்.வி சி-37 (PSLV-C37) ஏவுகணையில் 104 விண்கலன்களை விண்ணில் செலுத்தி உலக சாதனை படைத்த விஞ்ஞானிகள் குழுவில் எட்டு சாதனையாளர்கள் பெண்களே. இவர்கள் வெற்றி பெற்றதால் மொத்த பெண்கள் சமுதாயமே வெற்றி பெற்றதாகக் கருத இயலாது. காரணம் நம் நாட்டில் இன்னும் அடித்தட்டு நிலையில் பல லட்சம் பெண்கள் தங்களின் அடிப்படை உரிமைகளை, கல்வியை இழந்து வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் படிப்பதற்காகவும், வேலைக்காகவும் மேலை நாட்டிற்கோ, பெரிய மாநகரங்களுக்கோ சென்று அங்குள்ள நிறுவனத்தில் சேர்ந்து, அங்குள்ளவர்களிடம் பழகுவதும், பேசுவதும் கலாச்சாரச் சீரழிவாகப் பார்க்கப்படுவது ஏன்? பெண் என்பவள் யார்? பெண்ணியம் என்பது என்ன? பெண்களுக்கு சமுதாயத்தில் இன்றைய நிலைமை என்ன? ஒதுக்கப் பட்டிருக்கார்களா? உரிமைகள் மறுக்கப் பட்டிருக் கிறதா? அவர்களின் சாதனைகள் அங்கீகாரம் பெற்றுள்ளதா? சாதனையாளர்களை ஆண் சமுதாயம் எப்படிப் பார்க்கிறது? அவர்களை மனதார வாழ்த்தி, அவர்களுக்கு ஊக்கம் அளிக்குமா இந்தச் சமுதாயம்? இல்லை, அவர்கள் சமுதாயக் கலாச்சாரத்திற்குக் கேடு செய்கிறார்கள் என்று முடக்கிடுமா?

சமுதாயம் என்பது ஒரு நாணயம் போன்றது. இருபாலரும் சமமாக மதிக்கப்பட்டால்தான், ஒன்றாக இருந்தால்தான் அந்த நாணயம் மதிப்பு பெற்றதாக இருக்க முடியும். எம்போன்ற கல்லூரிப் பெண்கள் சமமான தோழர்களுடன் பேசுவது தவறு. இன்னும் உடைதான் கலாச்சாரச் சீரழிவிற்குக் காரணம் என்றும், மாலை 6 மணிதான் விதிக்கப் பட்ட காலம் என்றும் கூறுகின்றனர். இராசாளி போல் பறக்க நினைக்கும் எம்மை கிளி என்று அடைத்து வைப்பது நியாயமா?

'கற்பு' என்ற சொல் ஏன் இந்த வளரும் நிலையிலும் பெண்களுக்கு மட்டுமே வகுக்கப் பட்டிருக்கிறது. இது ஆண்களுக்கும் சம்பந்தம் உடையது தானே? பெண்களை மாலை வேளையிலே வீட்டிற்குச் சென்றிட வேண்டும் என்று கூறும் சமூக சீர்திருத்தவாதிகளே! ஆண்களிடம் பெண்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்றும், பெண்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஏன் அறிவுறுத்தவில்லை?

"மனிதி வெளியே வா;
மனிதன் என்ற சொல்லுக்குள்ளே அடங்காத பெண்ணே;
உயரம் என்பது உன்னுடையதே"

என்ற பாடல் வரிகளுக்கேற்ப பெண் என்பவள் இருக்க வேண்டும்.

வன்மை, கோபம், ஆளுந்திறம் ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்கும் சொந்தமாகும். பெண் என்பவளுக்கு அமைதியும், அதிகாரமும் உண்டு. இதனை ஆண் சமூகத்தினர் ஒப்புக்கொண்டு அவர்களின் முன்னேற்றப் பாதைக்கு வித்திட்டு நல்லதொரு சமுதாயம் உருவாகப் பாடுபட வேண்டும்.



Dr.பெரியார்செல்வி

# உடல் - உணர்வுகள் பற்றி பெண்களுடன் விவாதிப்போம்

பாலின சமத்துவத்தின் முதல் நிலை - அடிப்படை நிலை என்னவென்றால், பெண்ணின் உணர்வு களையும், உடலையும் புரிந்து கொள்ள முயற்சித்தல் ஆகும். மருத்துவர் என்ற முறையில் பெண்கள் சந்திக்கும் சில முக்கிய உடல் சிக்கல்களைப் பற்றி எழுதுகிறேன். இவை பெண்கள் படிப்பதற்காக அல்ல. தந்தையாக, சகோதரனாக, காதலனாக, தோழனாக, கணவனாக, மகனாக பெண்களுடன் வாழும் ஆண்கள் அவசியம் படித்துப் புரிந்து கொள்வதற்காக எழுதப் படுவதாகும். இவை போன்ற உடல் சிக்கல்கள் குறித்து உங்களுடன் வாழும் பெண்களுடன் விவாதியுங்கள். அவர்கள் எந்த வகை உறவாக இருந்தாலும் அந்தப் பெண்களுடன் விவாதியுங்கள். உடல் நிலைகளைப் பற்றி மட்டுமல்ல உணர்வு நிலைகளையும் விவாதியுங்கள். பாலின சமத்துவத்தின் வழியேதான் சமூக ஜனநாயகம் உருவாகும்.



**1. மாதவிடாய் முன்பு உள்ள அறிகுறிகள்** Premenstrual syndrome (PMS)

வாய்வுப்பிரச்சனை, வயிற்றுப் பகுதியில் உள்ள தசைப்பிடிப்பு, மார்பக வீக்கம் மற்றும் வலி, மலச்சிக்கல், கைகால் வலி மற்றும் தசைப்பிடிப்பு, முகப்பரு இதில் எதாவது ஒன்றிரண்டு பிரச்சனைகள் மாதவிடாய்க் காலத்திற்கு இரண்டு அல்லது ஒரு வாரத்திற்கு முன்பு தோன்றும். சில பெண்களுக்கு இது அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும். அதை phon(Pre-menstrualDysic disorder) என்று அழைப்பர்.

**2. இடமகல் கருப்பை அகப்படலம்** Endometriosis

ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் நிற்கும்போது ஏற்படும் பிரச்சனை. ஒவ்வொரு மாதவிடாய் சுழற்சியின் போதும் கரு உருவாக இரத்தப் படலம் மெத்தை போன்று உருவாகும். இது மாதவிடாய்ச் சுழற்சியின்போது வெளியேறுகிறது. சில நேரங்களில் சரியாக வெளியேறாமல் மாதவிடாய்ச் சுழற்சியில் ஒழுங்கின்மையை ஏற்படுத்தி, அதிகமான வயிற்று வலியுடன் உதிரப்போக்கு ஏற்படுகிறது. இந்த வலி கால் வரை பரவிவிடும். குழந்தையின்மைக்குக் காரணமாகி விடும்.

**3. சினைநீர்ப்பைக் கட்டி** Polycystic ovary syndrome (pcos (or) pcod)

ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி, உடற்பருமன், முகப்பரு, முகத்தில் முடி (தாடி மற்றும் மீசை) வருதல், மன அழுத்தம், ஆண் ஹார்மோனான *(Testosterone)* அதிகம் சுரப்பதால் ஆண் தன்மை தோன்றுதல், சினைப்பை ஆரோக்கியமற்ற கருமுட்டையை உருவாக்குதல் ஆகியவற்றின் விளைவாக குழந்தையின்மை ஏற்படும். இயற்கை மருத்துவத்தில் தீர்வு காணமுடியும்.

**4. நார்த்திசுக்கட்டி** Fibroids

3 அல்லது 4 பெண்களில் ஒருவருக்கு கருப்பைக்கட்டி வருகிறது. பொதுவாக இந்தப் பிரச்சனை மாதவிடாயின்போது ஏற்படும் அதிகப்படியான உதிரப்போக்கு மற்றும் தாங்கமுடியாத வயிற்று வலியின்போது அல்லது கருத்தரித்தலில் தாமதமாகுவதால் மட்டுமே டாக்டரின் உதவியுடன் கண்டுபிடிக்கப் படுகிறது.

இந்தக் கட்டி என்பது நார் போன்ற பகுதியே தவிர (இழை நார் பகுதி) வேறொன்றுமில்லை. கர்ப்பப்பையில் பெண்களின் ஹார்மோன் ஆன

ஈஸ்ட்ரோஜென்னால் மெதுவாக வளரத் தொடங்குகிறது. இயற்கையாக வளரக்கூடியது. சிலசமயம் *(Menopause)* மாதவிடாய் முடியும் போது ஹார்மோன் குறைவால் குறையத் தொடங்கும். எப்போதாவது அதிக எடையுடன் கிலோ கணக்கில் வளரும். அப்போது உடலுறவின் போது வலி, அடிக்கடி சிறுநீர்கழித்தல், சிறுநீர் கட்டுப்படுத்த முடியாத தன்மை ஆகிய பிரச்சனைகள் ஏற்படலாம். சிலசமயம் மலட்டுத் தன்மையைக் கூட உருவாக்கும்.

**5. புணர் புழையழற்சி Vaginitis**

பிறப்புறுப்பில் எரிச்சல் மற்றும் பிறப்புறுப்பைச் சுற்றி, சிவந்து அரிப்பு ஏற்படுதல், வெள்ளைப்படுதல் மற்றும் துர் நாற்றத்துடன் கூடிய வெள்ளைப் படுதல், சிறுநீர் கழிக்கும் போது வலியுடன் கூடிய எரிச்சல் உணர்வு அல்லது உடலுறவின்போது வலிபோன்றவை புணர் புழையழற்சியால் உண்டாகும். சில பெண் களுக்கு எவ்வித அறிகுறி களுமின்றிகூட வரும். அதிப்படியான உடல்சோர்வு, இறுக்கமான ஆடை அணிதல், உடலுறவு, மலம் கழித்த பின் சரியாக சுத்தம் செய்யாமை போன்றவை இதற்குக் காரணிகளாகும். பாக்டீரியா தொற்று காரணமாகத்தான் இந்த அழற்சி ஏற்படுகிறது.

**6. சிறுநீர் தட தொற்று cystitis**

பெண்களின் சிறுநீர்ப் பாதை மிகவும் குறுகியது. இதனால் தொற்று வருவது சுலபமாகிறது. ஆண்களைவிட பெண்களுக்கே அதிகமாகத் தொற்று வருகிறது. அதிகமாக மாதவிடாய் நிற்கும்போது *(Menopause)* சிறுநீர்ப்பையில் தொற்று அடிப்பகுதியிலும், சிறுநீரகத்தில் தொற்று மேல் பகுதியிலும் வருகிறது. சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், வலி, அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உணர்வு, காய்ச்சல் போன்றவை இதன் அறிகுறிகள். இது பெரும் பாலும் *E.Coti* என்ற பாக்ட்ரியா வால் ஏற்படுகிறது.

**7. இரத்தசோகை Anemia**

உடற்சோர்வு, தோல் வெளுத்துக் காணப்படுதல், நகங்கள் உடைந்துபோதல், பகலில் உறக்கம் வருதல், நாக்கு வலியுடன் கூடிய வீக்கத்துடன் இருத்தல், வாய் பகுதி வெடித்து காணப் படுதல் போன்ற அறிகுறிகள் இரத்த சோகையினால் ஏற்படும். பொதுவாக கர்ப்ப காலத்தின் போது, *B2,B6,B12* வைட்டமின்கள் குறைபாடினால் மற்றும் ஊட்டச் சத்துக் குறைவான உணவு உண்பதினால் ஏற்படுகிறது.

**8. மார்பக மற்றும் கர்ப்பபை வாய் புற்றுநோய் Breast and cervical cancer**

தற்போது பெரும்பான்மை யான பெண்கள் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப் படுகின்றனர். இந்தியாவில் பெண்கள் மிகவும் முற்றிய நிலையில் மார்பக நோயுடன் மருத்துவமனை வருகின்றனர். நகர்ப்புற பெண்கள் அதிகமாக பாதிக்கப் படுகின்றனர். தன் உடலைக் கவனித்துக்கொள்ள நேரமின்மை, உணவுப் பழக்க வழக்கம், வாழ்க்கைமுறை மாற்றம், மனஅழுத்தம், தாமதமான திருமணம் போன்ற காரணிகளால் நகர்புறப் பெண்கள் பாதிக்கப் படுகின்றனர்.

மார்பகத்தில் கட்டி இருப்பது போன்ற உணர்வு, மார்பகத்தில் நீர் வடிதல் *(Nipple)* முளைக்காம்பைச் சுற்றி வேனக் கட்டி உருவாதல், மார்பகத்தில் வலியுடன் கூடிய *(Rash)* கட்டி அல்லது வலி இல்லாத கட்டி தோன்றுதல் போன்றவை இதற்கான அறிகுறிகள்.

**9. கர்ப்பபை வாய் புற்றுநோய்**

மார்பகப்புற்று நோயை விட அதிகமான பெண்கள் மரண மடைவது கர்ப்பபை வாய்ப்புற்று நோயால் தான். வருடத்திற்கு இந்தியாவில் *33,000* பெண்கள் கர்ப்பபை வாய்ப்புற்று நோயால் இறக்கிறார்கள். இது ஹியூமன் பாப்பிலோமா *(Human Papilloma)* என்னும் வைரஸால் வரக்கூடியது. இது உடலுறவின்போது பரவக் கூடியது. சுத்தமின்மை, அதிக மகப்பேறு, போதுமான இடைவெளியின்றி குழந்தை பெறுதல், ஊட்டச்சத்துக் குறைபாடு, அடிக்கடி கருச்சிதைவு, சிறுவயதில் திருமணம், பாதுகாப்பற்ற உடலுறவு போன்றவை இதன் காரணிகள் ஆகும்.

**10. இதய நோய்**

நாம் பொதுவாக இதயநோய் ஆண்களுக்கே அதிகமாக வருவதாக நினைக்கிறோம். ஆனால் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அதிகமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் பாதிக்கபடுகிறார்கள். மார்பகம் மற்றும் கர்ப்பபை வாய்ப் புற்று நோயை விட இதய நோயால் இறக்கும் பெண்களே அதிகம். வேலைப் பளுவுடன் அதிக வீட்டு வேலை செய்யும் பெண்கள் இருமடங்கு மனஅழுத்தம் பெற்று இதயநோயால் பாதிக்கப் படுகிறார்கள்.

சரியான நேரத்திற்கு சாப்பிடாமல் இருப்பது, கர்ப்பத் தடை மாத்திரை, உடற் பயிற்சி யின்மை, ஊட்டச்சத்துக் குறை பாடு போன்ற காரணிகளால் இளம் வயதுப் பெண்கள் ஆண்களைவிட அதிகம் பாதிக்கப் படுகின்றனர். (சில சமயங்களில் மரணம் கூட ஏற்படுகிறது). பொதுவாகப் பெண்களுக்கு ஆண்களைப் போல் நெஞ்சுவலி வருவதில்லை. ஆண்களுக்கு பெருதமனியில் அடைப்பு ஏற்படுகிறது அதனால் நெஞ்சுவலி வருகிறது. பெண் களுக்கு சிறுதமனியில் அடைப்பு ஏற்படுவ தால் இது ஆன்சியோ கிராஃபில் *(Angiography)* தெரிவ தில்லை. இதனால் மூச்சுவிடுவதில் சிரமம், தோள்பட்டை மற்றும் கை வலி, முதுகுவலி, கழுத்து மற்றும் தாடை வலி அல்லது வயிற்றுவலி, வாந்தி மற்றும் வேர்வையுடன் கூடிய தலைவலி போன்றவை ஏற்படும்.

**11. எலும்புப்புரை Osteoporosis**

பெண்களுக்கு அவசியமான சத்துகளான இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம், கால்சியம், வைட்டமின் டி போன்றவை ஒவ்வொரு வாழ்க்கைக் கட்டத்திலும் தேவை. எப்போது

எலும்புப்புரை தோன்றுகிறதோ அப்போது பெண்களுக்கு கால்சியம், வைட்டமின் டி குறைபாடு தோன்றுகிறது. இதனால் எலும்புத் தேய்மானம் மற்றும் எலும்பு முறிவு ஏற்படுகிறது. இந்நோய் உள்ளதை *X-Ray* மூலம் கண்டறியலாம். சத்துமிக்க உணவுகள் மற்றும் உடற்பயிற்சியின் மூலம் இந்த நோய் வராமல் தடுக்கலாம்.

**12. கீல்வாதம் Arthritis**

கீல்வாத நோயால் ஆண் களைவிடப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இது ஒருவகை எலும்புத் தேய் மானம். இது 40 வயதில் வருகிறது. பொதுவாக இது பரம்பரை நோய் ஆகும். முக்கியமாக எலும்பு களிலும் மூட்டுகளிலும் வலியுடன் கூடிய வீக்கம் உண்டாகும். பொதுவாக உள் உறுப்புகளில் பாதிப்பு ஏற்படும். கைகால்களில் வாதம் ஏற்படும். காலை எழுந்த வுடன் மூட்டுகளில் முடக்கம், உடல் சூடு போன்ற அறிகுறிகள் உண்டாகும்.

**13. உடற்பருமன்**

உடற்பருமன், சர்க்கரை நோய் மற்றும் இதயநோயை உண்டாக்கு கிறது. இளம் பெண்களின் உடற்பருமன், ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி, கருச் சிதைவு மற்றும் மலட்டுத் தன்மையை உண்டாக்கு கிறது. கர்ப்பகாலத்தின் போது இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை வியாதியை உண்டாக்கு கிறது. மூன்று சதவீதப் பெண்கள் உடற் பருமனால் பாதிக்கப் படுகிறார்கள். உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு நிரந்தரத் தீர்வு தரும்.

**14.மன அழுத்தம்**

மனஅழுத்தம் பெண்களை அதிகமாக பாதிக்கிறது. நெருங்கிய உறவினர்களின் இழப்பு, உடற் பருமன், வேலைப்பளு, ஹார் மோன் மாற்றம், பொதுவாக மகப்பேற்றுக்குப் பின்பும், மாத விடாய் சுழற்சி நிற்கும்போதும் *(Menopause)* பெண்கள் மனஅழுத்தத் திற்கு உள்ளாகிறார்கள். 80 சத பெண்கள் மகப்பேற்றுக்குப் பின்பு தான் பாதிக்கப்படுகிறார்கள்.

**அறிகுறிகள்:** தற்கொலை முயற்சி, காரணம் இல்லாத அழுகை, தூக்கமின்மை, உடல் எடை குறைவு, குற்ற உணர்வு, எதிலும் ஆர்வமின்மை

**15. மாதவிடாயின் கடைசி சுழற்சி Menopause**

மெனோபாஸ் காலத்தில், பெண்கள் உடலிலும் மனதிலும் பெரும் மாற்றத்தை எதிர் கொள்கிறார்கள். மெனோபாஸ் தோன்றும் வயது 48 முதல் 55 வயது ஆகும்.

**முதல்நிலை Pre Menopause:** நான்கு முதல் 5 வருடங்கள் வரை தோன்றுவது. இக்காலக் கட்டத் தில் ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி ஏற்படும்.

**உடலியல் அறிகுறிகள்:** உடற்சோர்வு ,அதிகப்படியான உணவு எடுத்தல், தூக்கமின்மை, கை கால் வலி தோன்றுதல், காலையில் எழுவதில் சிரமம்.

**எமோசனல் அறிகுறிகள்:** தற்கொலைக்குத் தூண்டுவது, ஓய்வின்மை, எரிச்சல் அடைவது.



**நடைமுறையில் அறிகுறிகள்:** கவனக்குறை பாடு, ஆர்வமின்மை, முடிவு எடுப்பதில் தடுமாற்றம், ஞாபக மறதிபோன்றவை

**சிகிச்சை முறைகள்:** மருத்துவரின் ஆலோசனையைப் பெறுதல், சரியான சிகிச்சை முறையில் உடற்பயிற்சியுடன் கூடிய ஆரோக்கியமான உணவு களை உண்ணுதல், பாதிக்கப் பட்டவரின் குடும்பத் தினர் மனநல ஆலோசகரை அணுகுதல், கணவர் மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொள்ளுதல்.

வைட்டமின் பி, ஒமேகா 3 நிறைந்த உணவுகளை அதிகமாக எடுத்து நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் குடிப்பதின் மூலம் நீர்ச்சத்துக் குறைபாடு மற்றும் அஜீரணக் கோளாறு, உடற்சூடு ஆகியவை குறையும். வைட்டமின் B12 மற்றும் B6 மன அழுத்தம் குறைவதற்கு மிகவும் உதவுகிறது. இயற்கையாகக் கீரைகள், பாதாம், ஈரல்களில் இந்தச்சத்து அதிகமாக உள்ளது. பால் மற்றும் பால் பொருட்களில் *B6* ஃபோலிக் அமிலம் அதிகமாக உள்ளது. ஒமேகா 3 மீன்களில் அதிகமாக உள்ளது. இந்தச் சத்து மன அழுத்தத்திற்கு எதிராக போராடக்கூடியது.

**தவிர்க்கவேண்டியவை:** அரிசி, கோதுமை மற்றும் சிறுதானியங்கள், வெள்ளைச் சர்க்கரை, நாட்டுச் சர்க்கரை அனைத்தையும் தவிர்க்க வேண்டும். இவை அனைத்தும் கார்போ ஹைட்ரேட் நிறைந்தவை. கார்போஹைட்ரேட் நிறைந்த அனைத்து உணவுகளையும் தவிர்க்க வேண்டும். பதப் படுத்திய உணவுகள், சுத்தி கரிக்கப்பட்ட எண்ணெய், கேக் வகைகள், புரோட்டா போன்ற வற்றைத்தவிர்க்க வேண்டும்.

இரும்புச்சத்து, கால்சியம், செலினியம், மெக்னிஷியம், சிங்க் போன்றவை மன அழுத்தத்தைத் தவிர்க்கும் சத்துப் பொருட்கள் ஆகும். *Menopause* - ன் காரணிகளும், ஹார்மோன் மாற்றங்களினால் நரம்பு மற்றும் மூளையை பாதிக்கிறது. இதன் காரணமாக மன அழுத்தம் ஏற்படுகிறது.



விஜயலட்சுமி ஆத்தூர்

# கண்ணகியைப் பின்பற்ற வேண்டாம்



இக் காலத்துப் பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்று வழி காட்டவே. எப்படி வாழக் கூடாது என்று எடுத்துக் காட்டவே.

கண்ணகி என்றவுடன் 'கற்புக்கரசி', 'பத்தினி' என்ற எண்ணம், மரியாதை மக்கள் மனதிலே ஏற்படுகிறது. காரணம், கண்ணகியைப்பற்றி ஓர் உயர்வான எண்ணம் மக்கள் மத்தியில் வெகு காலமாகப் பரப்பப்பட்டுவருகிறது.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் அழியாத இடத்தைக் கண்ணகிக்கு வகுத்துக் கொடுத்துள்ளது. அவள் வாழ்ந்த வாழ்க்கை சரியானதா? அவள் வாழ்வைப் பின்பற்றி வாழ்வது சரியா? "கண்ணகியைப்போல் வாழ்" என்கிறார்களே அது சரியா? கண்ணகியின் வாழ்வு, காலத்தின் கட்டுப்பாடாக இருக்கலாம். ஆனால், இன்றைக்கு அது சரியான வாழ்வு என்று கொள்ளக் கூடாது. அதைப் பின்பற்றவும் கூடாது.

கண்ணகியின் வாழ்வு ஆண் ஆதிக்கச் சமுதாயத்தின் விளைவு. ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் வாழலாம், எத்தனை பெண்களுடன் வேண்டுமானாலும் வாழலாம், எத்தனை பேரை வேண்டுமானாலும் மணக்கலாம் என்றிருந்த காலம்.

ஆணின் சுகமே பெண்ணின் பாக்கியம் என்று அறிவுறுத்தப்பட்ட காலம். ஆணின் மகிழ்விற்காக பெண் எந்தத் தியாகத்தையும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டநிலை.

5 வயதிலும் 10 வயதிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்ட காலம். கண்ணகி, கோவலன் திருமணங்கூட அப்படித்தான் நடந்ததாம். அன்று 5 வயது சிறுமிக்கும் 10 வயது சிறுவனுக்கும் திருமணம் செய்துவைக்கப்பட்டபின், சிறுவன் நோயிலோ, விபத்திலோ இறந்து போனான் என்றால், அந்த 5 வயது சிறுமி தாலியறுத்துவிடவேண்டும். 5 வயதிலே அவள் விதவையாகிவிட வேண்டும் என்ற காலம் தான் கண்ணகி வாழ்ந்த காலம். இன்றைக்கு இப்படிப் பட்ட பழக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? போற்றிப் புகழ முடியுமா? முடியாது!

அப்படித்தான் கண்ணகியின் வாழ்வையும் இன்றைக்கு ஏற்றுக்கொள்ள, ஏற்று வாழ இயலாது! கண்ணகி வாழ்ந்தது வாழ்க்கையல்ல. அது ஒரு பெண்மைப்பலி! அன்றைக்கு ஆணாதிக்கச் சமுதாயத்தில் பலியானவர் களுள் கண்ணகியும் ஒருத்தி. இந்தப் பிரச்சனை அரண்மனைவரை சென்றதால் அது பெரிய தாயிற்று, காவிய மாயிற்று.

இப்படி ஆணின் ஆதிக்கத்திற்குப் பலியாகி, அடங்கி, ஆமையாய், ஊமையாய் வாழ்வதுதான் பத்தினித் தன்மையென்று பறை சாற்றப்பட்டது. பெண்களை வார்த்தையால் பெருமைப்படுத்தி, அவர்களின் வாழ்வையும் உரிமையையும் பறித்தது ஆண் ஆதிக்கச் சமுதாயம்.

பெண்ணை அடிமைகொள்ள ஆண்கள் கையாண்ட புகழ்போதைக்கு மயங்காமல், பெண்கள் விழிப்பாக இருக்கவேண்டும். பொறுக்க முடியாத அளவிற்குக் கணவனின் செயல்கள் நடக்குமாயின் விலகி வந்து வாழ்ந்துக்காட்ட வேண்டும்.

கண்ணகியின் வாழ்வு ஆணாதிக்கச் சமுதாயத்தின் அலங்கோலம். அதற்காக, அவளைப் போலவே இன்றைக்கும் வாழவேண்டும் என்று அறிவுறுத்துவது அறிவீனம்!

கண்மூடித்தனமாக எந்தவொன்றையும் பாராட்டவும், கடைப்பிடிக்கவும் செய்வதே இன்றைக்குப் பலருக்கும் வழக்கமாகி வருகிறது. பகவத்கீதையை படிக்காதவன் அதை புனிதநூல் என்பதும், வேதத்ததை உயர்த்திப் புகழ்வதும் போலத்தான் கண்ணகி வாழ்வு உயர் வாழ்வு என்று உரைப்பது.

எந்தவொன்றையும் குறைகூறும் முன்பும், புகழும் முன்பும், ஏற்கும் முன்பும் அதை நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இதுவே அறிவுடைமை,துணிவுடைமை, சரியான வழியிலே சமுதாயத்தை வழி நடத்த வேண்டும்.மரபு மயக்கங்களில் மதியிழக்கக்கூடாது.

Periyar – Pioneer of Radical Feminism

# பெரியார் புரட்சிகரப் பெண்ணியத்தின் முன்னோடி

பெண்ணியம் என்பது ஆண் - பெண் சமத்துவத்திற்காகக் கண்டறியப் பட்ட ஓர் தத்துவமாகும். 'பாலின சமத்துவத்தை அடைவது எப்படி?' என்ற கருத்தியலைப் பொறுத்து, மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism), வீரமான (அ) புரட்சிகரப் பெண்ணியம் (Radical Feminism), மார்க்சிய (அ) சமதர்மப் பெண்ணியம் (Marxist or socialist Feminism), கலாச்சாரப் பெண்ணியம் (Cultural Feminism) என பெண்ணியத்தில் பல வகைகள் உண்டு.

"சமூகத்தில் நிலவும் பல்வேறு வடிவிலான பாலினப் பாகுபாடுகளுக்கான ஆணிவேரைக் கண்டறிந்து, அதனை அடியோடு அழித்தொழிக்க, பல அதிரடிக் கருத்துகளை எடுத்துரைத்து, அதை பெண்கள் உணர்ந்தால் தான் சமத்துவம் சாத்தியப் படுமே ஒழிய, புதிய சட்டங்கள் மூலமாகவோ, அதில் திருத்தங்கள் செய்வதாலோ ஆணாதிக்கத்தை ஒழிக்க முடியாது"

என்பது தான் ரேடிக்கல் ஃபெமினிசத்தின் கோட்பாடாகும். பல மேற்கத்திய பெண்ணிய வாதிகளின் கருத்துகளும், பெண்ணிய மேதை பெரியாரின் கருத்துகளும், செயல்பாடுகளும் ரேடிக்கல் ஃபெமினிசத்தின் வடிவம் தான் !

பாலினப் பாகுபாடுகள் மிகவும் ஆழமாக வேரூன்றி உள்ள இச்சமூகத்தில், 1925 லேயே பெண் விடுதலையை இலக்காகக் கொண்ட சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு, முக்கியமாக அதைப் பல பெண்களின் பங்களிப்போடு நடத்திய பெருமைக் குரிய தலைவர் பெரியார்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில், ஆணாதிக்கத்தை அதிர வைக்கும் பல புரட்சி கரமான கருத்துகளை எடுத்துரைத்து, வாழ்நாள் முழுவதும் பெண்ணுரிமைக்காக உழைத்த சில பெண்ணிய வாதிகளின் கருத்துகளையும் பெரியாரின் பெண்ணியக் கருத்துகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்

**அடுப்பங்கரை – பிள்ளை பெறும் தொல்லை:**

'இரண்டாம் பாலினம்' (The Second Sex) என்ற புத்தகத்தை 1949-இல் எழுதிய பிரெஞ்சு பெண்ணிய வாதி சீமோன் டி புவர் (Simone de Beauvoir) 1908 ம் ஆண்டு பிறந்தவர். அவர், "ஒரு பெண் பெண்ணாகப் பிறப்பதில்லை; அவள் பெண்ணாக உருவாக்கப் படுகிறாள்" என்று சொல்கிறார். நம் சமூகத்திற்கு இது மிகவும் பொருத்தமானதாகும்.

ஜாதி, கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் என்ற பெயரில் பெண்களுக்கு ஆயிரம் பாடங்களைக் கற்பித்து அவர்களைப் பெண்மையோடு இருக்க ஆணையிடுகிறது இச்சமூகம். ஆனால் ஆண்களுக்கு இப்பாடங்களில் ஒன்றைக் கூட இச்சமூகம் கற்பித்த தில்லை. எனவே அவன் எதையும் சுதந்தரமாகச் செய்யலாம்; ஆனால் அவளுக்கோ ஆயிரம் விதிமுறைகள் என்பது தான் ஒடுக்கு முறையின் அடிப்படைத் தத்துவம்.



பெண்களை அடிமையாக்கும் அனைத்தையும் கேள்விக்குட்படுத்தும் சீமோன் டி புவர், தாய்மை என்பது பெண்ணடிமைத்தனம் என்பதை "மகப்பேறு என்பது சுயகாதல், பிறருக்கு உதவும் இயல்பு, கனவு, வாய்மை, தீய நம்பிக்கை, பக்தி மற்றும் வெறுப்பு மனப்பான்மையின் ஒரு விசித்திரமான சமரசம் ஆகும். (Maternity is a strange compromise of narcissism, altruism, dream, sincerity, bad faith, devotion and cynicism)" என்று தன் புத்தகத்தில் குறிப்பிடுகிறார் (1949 ம் ஆண்டு).

மேற்கிந்தியப் பெண்ணியச் செயற்பாட் டாளரான (Andrea Dworkin) ஆண்ட்ரியா த்வார்கின் 1946 ஆம் ஆண்டு பிறந்தார். அவரும், *"Childbearing is glorified in part because women die from it"* "பிள்ளைப்பேறு கொண்டாடப்படுகிறது ஏனெனில் அதில் பெண்கள் இறக்கக் கூடும் என்பதாலும் தான்" என்கிறார்.

ஆனால் பெரியார் அதனை இன்னும் அழுத்தமாக,1928 ம் ஆண்டிலேயே

"உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போக வேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்துப் புருசனை நியமித்துக் கொள்வதா யிருந்தாலும் பெண்கள் பொதுவாக உண்மை விடுதலை அடைந்து விட முடியாது என்றே சொல்லுவோம்"

- 12.08.1928 குடிஅரசு என்று எழுதியுள்ளார்.

இதே போல், சமைப்பது போன்ற வீட்டு வேலைகள், குழந்தை வளர்ப்பு முதலியன பெண்களுக் கென்றே ஒதுக்கப்பட்டிருப்பதையும், அதிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்பதையும் தனது புத்தகத்தில் குறிப்பிடுகிறார் சீமோன் டி புவர். இதனை

"ஆயுள் முழுவதும் அடுப்பங்கரையிலேயே கிடந்து மடிவதற்காகவே ஒரு தனி இனம் இருக்க வேண்டும் என்பது பச்சை வர்ணாசிரமத்திலும் பன்மடங்கு மோசமான கொள்கை"

*குடி அரசு 18.03.1947*

என்று 1947-ஆம் ஆண்டிலேயே குறிப்பிடு கிறார் பெரியார்.



### திருமணம் + குடும்பம் = பெண்களை அடிமைப்படுத்தும் நிறுவனங்கள்

திருமண அமைப்பு முறை பெண்களை எப்போதும் அடக்கி ஆள்கிறது. பெண் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு ஓரளவிற்கு சாத்தியப்பட்டுள்ள இக்காலக்கட்டத்திலும், பெண்கள் கல்வி அறிவுள்ள, பிள்ளை பெற்று வளர்க்கின்ற, சிலர் குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவுகின்ற அடிமைகளாகவே திருமண அமைப்பு முறைக்குள் வாழ்கின்றனர். ஆகையால், திருமணம் மற்றும் குடும்ப முறையை எதிர்த்துப் பல பெண்ணிய வாதிகள் குரல் கொடுத்துள்ளனர்.

அமெரிக்க பெண்ணியவாதியான கேட் மில்லெட் (Kate Millett) 1934 ல் பிறந்தவர். அவர் குடும்பமும், திருமணமும் ஆணாதிக்கத்தின் பெரும் கூறுகள் என்கிறார்.

*1969 ல் அவர் எழுதிய 'செக்ஷுவல் பாலிடிக்ஸ் (Sexual Politics)' என்ற புத்தகத்தில்,*




"பாரம்பரியத் திருமண முறை மற்றும் தனிக்குடும்பத்தின் முழுமையான அழிவு தான் பெண்ணியத்தின் புரட்சிகரமான அல்லது கருத்தியல் ரீதியான இலக்கு ஆகும்" (The complete destruction of traditional marriage and the nuclear family is the revolutionary or utopian goal of feminism) என்கிறார்.

அமெரிக்கப் பெண்ணியவாதியும், பத்திரிக்கையாளருமான க்ளோரியா ஸ்டெய்னம் (Gloria Steinem) அவர்களும் **திருமணத்தைப் பெண் அடிமை சாசனம்** என்றே கூறுகிறார். இவரும் 1934 ல் பிறந்தவர்.

சீமோன் டி புவர் (Simone de Beauvoir) அவர்களும்,

"பெண்கள் எவ்வளவிற்குக் குடும்பத்தை விட்டுத் தப்பிக்கின்றனரோ, அவ்வளவிற்குச் சார்பு நிலை யிலிருந்து தப்பிக்கலாம்" (woman escapes complete dependency to the degree in which she escapes from the family) என்கிறார்.

திருமணம் பெண்களை அடிமைப்படுத்தும் நிறுவனம் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்திய பெரியார், அதை கிரிமினல் குற்றமாக்க வேண்டும் என்றார்.

"இன்பத்திற்காகக் கல்யாணம் என்றால் அதற்கேற்ற முறையில் கல்யாணத் திட்டம் அமைக்கப்பட வேண்டுமே ஒழிய மற்றப்படி இன்பமும் காதலும் அல்லாமல் வெறும் உலகத்தை நடத்துவதற்கும், உலக விருத்திக்கு என்று புலபுலவென பிள்ளைகளைப் பெறுவதற்கும், ஆண் மக்களுக்கு அவனது வாழ்வுக்கும் கீர்த்திக்கும், திருப்திக்கும் நிபந்தனையற்ற நிரந்தர அடிமையாகப் பெண் இருப்பதற்கும் தான் கல்யாணம் என்பதனால், அம்மாதிரிக் கல்யாண வாழ்க்கையில் நமது பெண் மக்கள் ஈடுபடுவதை விடக் கல்யாணமே இல்லாமல் வாழுவதையோ அல்லது அவர்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரத்தோடு நடந்து கொள்வதையோ தான் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்" *(குடி அரசு 10.03.1929)*

என்று பெண்கள் திருமணமின்றித் தனித்து வாழ்வதை ஆதரித்து 1929-ம் ஆண்டிலேயே எழுதியுள்ளார் பெரியார்.

### அழியட்டும் ஆண்மையும் பெண்மையும்!

வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும், ஆண்மை மற்றும் பெண்மையின் இலக்கணங்களைத் தொடர்ந்து கற்பித்துக் கொண்டே இருக்கிறது இச்சமூகம். கேட்டால் இது தான் நம் கலாச்சாரம் என்று சொல்வார்கள் கலாச்சாரக் காவலர்கள். ஆண்மைக்கும், பெண்மைக்கும் இச்சமூகம் கற்பிக்கும் அவ்விலக்கணங்கள் தான் பெண்களை நல்ல அடிமைகளாகவும், ஆண்களை எஜமானர் களாகவும் வளர்த்தெடுக்கின்றன. இதனால் தான்,

பெண்கள் 21-ம் நூற்றாண்டிலும் சிறந்த அடிமைகளாகவே உள்ளனர். எனவே ஆண்மையும், பெண்மையும் அழிந்தால் தான் சமத்துவம் பிறக்கும் என்ற கருத்தை பெண்ணியவாதிகள் பலர் பேசியுள்ளனர்.

ஆண்ட்ரியா த்வார்கின் i(Andrea Dworkn), ஆண்மை அழிந்தால் தான் பெண்கள் விடுதலையடைய முடியும் என்கிறார். (Only when manhood is dead - and it will perish when ravaged femininity no longer sustains it - only then will we know what it is to be free)

ஆனால் 1928 லேயே, பெரியார்

"ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பெண்கள் மறந்துவிடக் கூடாது. பெண்களால் 'ஆண்மை' என்ற தத்துவம் அழிக்கப்பட்டா லல்லாது பெண்மை விடுதலை இல்லை என்பது உறுதி. ஆண்மையால்தான் பெண்கள் அடிமையாக்கப்பட்டிருக் கிறார்கள்" (குடிஅரசு 12.8.1928) என்று கூறியுள்ளார்.

மேலும் ஆண்ட்ரியா த்வார்கின்

"தாங்கள் பொருளாகப் பார்க்கப்படுவது (Objectification) பற்றிய பெண்களின் அறிவானது மேலோட்டமான புரிதலோடு நின்றுவிடுகிறது. அழகு ஆராதிக்கப்படும் அதே வேளையில், அழகின்மை தண்டிக்கப்படுகிறது




(Female knowledge of objectification usually stops at a necessary but superficial understanding: beauty is rewarded and lack of beauty is punished)" என்கிறார்.

இதே போன்ற கருத்தை பெரியார்,

"பெண்கள், ஆண்களைப் போல் தங்கள் வசதிக் கேற்றவாறு உடையணிய வேண்டும்; தலை முடியைக் கத்தரித்துவிட வேண்டும் என்றும் கூறிய பெரியார், பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதை நிறுத்திவிட வேண்டும்" என்றார்.

"பெண்களின் உருவை அலங்கரிப்பது, அழகை மெச்சுவது, சாயலைப் புகழுவது ஆகியவை பெண்கள் சமுதாயத்திற்கு அவமானம், இழிவு, அடிமைத்தனம் என்பதை ஆயிரத்தில் ஒரு பெண்ணாவது உணர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன். அலங்காரம் ஏன்? மக்கள் கவனத்தை ஈர்க்கும்படியான நகை,துணிமணி, ஆபரணம் ஏன்? என்று எந்த பெண்ணாவது, பெற்றோராவது, கட்டினவராவது சிந்திக்கிறார்களா? பெண்கள் அஃறிணைப் பொருள் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக் கொண்டு மற்ற மக்கள் கவனத்தைத் தம் மீது திருப்புவது இழிவு என்றும் அநாகரிகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்குக் காரணம் அவர்கள் போகப் பொருள் என்ற கருத்தேயாகும். இது பரிதாபமாகவே இருக்கிறது.

(21.09.1946 அன்று திருப்பத்தூரில் நடைபெற்ற சுலோச்சனா - சம்பத் மணவிழாவில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவு)

என்று அழகின் மீதான அக்கறையும், அலங்காரமும் பெண்களைப் போகப் பொருளாக்கு கின்றன என்று பரிதாபப்படுகிறார் பெரியார்.

**விபச்சாரமும் பாலியல் சுதந்திரமும்**




செக்ஸ்.... இவ்வார்த்தையைக் கொண்டாடும் உரிமை ஆண் களுக்கே! இக்கருத்தியல் தான் ஒருபுறம் பெண்களைப், பாலியல் வன்முறைகளுக்கும், மறுபுறம் அவர்களைப் பாலியல் சுரண்ட லுக்கும் ஆளாக்குகிறது. ஆண்கள் தங்கள் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள ஒரு பெண் உடலைப் பணம் கொடுத்து வாங்கி அனுபவிக்க 'விபச்சாரம்' என்ற முறை, பல்வேறு பெயர்களில் எல்லா நாடுகளிலும் உள்ளது. அறிவியல் பூர்வமாகப் பார்த்தால் பெண்களுக்கும் பாலியல் ஆசைகள் உண்டு. ஆனால், அவர்கள் அதை வெளிப்படுத்த, அதைப் பற்றிப் பேச இச்சமூகம் அனுமதிப்பதில்லை. அதற்குக் காரணம் பெண்ணுடல் ஓர் ஆணின் ஆசைகளுக்குக் கட்டுப் பட்டதாக இருக்க வேண்டும் என்ற ஆணாதிக்க சமூகத்தின் சித்தாந்தமே! எனவே, விபச்சார முறைகளை எதிர்த்துப் பல பெண்ணிய வாதிகள் போராடியுள்ளனர்.

அமெரிக்கப் பெண்ணியவாதியான கேத்ரின் மெக்கின்னான் (Catharine MacKinnon 1946) அவர்களும் ஆண்ட்ரியா த்வார்கினும் இணைந்து ஆபாசப் படங்களுக்கும் விபச்சாரத்திற்கும் எதிராகப் போராடியுள்ளனர்.

ஆணாதிக்கச் சமூகத்தின் ஓர் கோர முகம் விபச்சாரம்!! அது சமூகத்திற்குக் கேடானது, ஏனெனில் அது பெண்களைப் பணம் இருப்பவர்கள் வாங்கி அனுபவிக்கும் பாலியல் பண்டங்களாக் குகின்றன. அது பாலியல் வன்முறைக்கு நிகரானது. ஏனென்றால் அதில் ஈடுபடும் பெண்ணின் விருப்பு வெறுப்புகள் கண்டு கொள்ளப்படாமல், பெண் உடல் மீதான் ஆண்களின் ஆட்சிக்குத் துணை போகிறது. இதனையே கேத்ரின்,

"The money thus acts as a form of force, not as a measure of consent. It acts like physical force does in rape" என்கிறார்.

பெரியாரும் 1930 ம் ஆண்டிலேயே விபச்சாரத்தைக் கேள்விக்குட்படுத்தியுள்ளார்.

"விபச்சாரம் என்னும் வார்த்தையின் அனுபவத் தத்துவத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் விபச்சாரம் என்பது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தை என்று தான் சொல்ல வேண்டுமே ஒழிய வேறல்ல. ஏனெனில், விபச்சார தோஷம் என்பதும் விபச்சாரம் செய்வதால் ஏற்படும் ஒழுக்கக் குறைவு என்பதும் இப்பொழுது வழக்கத்தில் பெண்களுக்கே தான் உண்டே ஒழிய ஆண்களுக்கு அந்த மாதிரி கிடையவே கிடையாது" - குடிஅரசு 26.10.1930

என்றும் பெண்கள் இதனை எதிர்த்துக் கேள்வி எழுப்ப வேண்டும் என்னும் வகையில்,

"இன்றையப் பெண்களின் மனோநிலை பெரிதும் மாறுதல் அடைய வேண்டும். விபச்சாரம் பெண்களுக்குத் தானேயொழிய ஆண்களுக்கு ஏன் இல்லை என்று இவர்கள் சிந்திக்க வேண்டும். ஆணுக்கு மட்டும் ஏன் விபச்சார தோஷம் இல்லை?" *(விடுதலை 11.10.1948)* என்கிறார்.

அதே போல் கற்பு பெண்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைக் கற்பிக்கும் சமூகம் ஆண்களுக்கு அப்படி ஒன்று இருப்பதாகவே சொல்வதில்லை என்று ஆஸ்திரேலிய பெண்ணிய வாதியும் பத்திரிக்கையாளருமான எமிலி மேகிர் (Emily Maguire) கேள்வி எழுப்புகிறார்.

பாலியல் சுதந்திரம் பெண்களுக்கு மறுக்கப் படுவதையும், பெண் உடல் மீது பெண்ணுக்கே அதிகாரம் இல்லாத தன்மை குறித்தும், கற்பு என்பதில் நிலவும் சமத்துவமற்ற தன்மை குறித்தும் பல மேற்கத்திய பெண்ணியவாதிகள் பேசியுள்ளனர்.

இது போன்ற புரட்சிகரமான கருத்துகளை 1928-லேயே பெரியார் தனது குடிஅரசு ஏட்டில் எழுதியுள்ளார்.

> "பெண்கள் விடுதலை வேண்டுமானால் ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்ப்பந்தக் கற்பு முறை ஒழிந்து இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை ஏற்பட வேண்டும்" *(குடி அரசு 08.01.1928.)*

இந்தியாவிலுள்ள பல பெண்ணுரிமை இயக்கங்களே (பார்ப்பனப் பெண்களால் நடத்தப் படுபவை) பெரியாரின் பெண்ணியக் கருத்துகளை இருட்டடிப்பு செய்கின்றன. ஆனால், உலகில் பல புரட்சிகரப் பெண்ணியவாதிகள் 20 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பேசிய, எழுதிய கருத்துகளை ஆணாதிக்கம் புரையோடிய இந்நாட்டில், 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே எடுத்துரைத்து, அதில் பலவற்றை செயல்படுத்தியும் காட்டியவர் பெரியார் என்பது ஆணித்தரமான உண்மையாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பீடுகளை வைத்துப் பார்த்தோமானால், இந்தியாவில் அல்ல.. உலகத்திலேயே தீவிரமான பெண்ணியத்தின் முன்னோடி *'Pioneer of Radical Feminism'* பெரியார் தான் என்று கூறுவது மிகையாகாது!!

> "பெண்கள் சுதந்திரத்துக்கும், பெண்கள் விடுதலைக்கும் அவர்கள் மனப்பான்மை சற்று மாறியேயாக வேண்டும். நான் அடிமையாய்த்தான் இருப்பேன். நீ மாத்திரம் எனக்கு எஜமானாய் இருக்கக் கூடாது என்பதில் அர்த்தமேயில்லை" *குடிஅரசு 21.06.1931* என்கிறார் பெரியார்.

**எனவே, தங்களை அடிமைப்படுத்தும் ஒவ்வொன்றையும் உணர்ந்து, அதனைத் தகர்த்தெறிய பெண்கள் தாங்களாகவே முன்வந்தால்தான் பாலின சமத்துவம் இந் நூற்றாண்டிலாவது சாத்தியப்படும்**

References:

1. பெரியார் களஞ்சியம் (பெண்ணுரிமை தொகுதிகள்) - தொகுப்பாசிரியர் கி.வீரமணி
2. English Translation of "The Second Sex" book written by Simone de Beauvoir
3. "Sexual Politics" book written by Kate Millett
4. "Intercourse" book and other writings of Andrea Dworkin
5. http://www.newyorker.com/magazine/2015/10/19/road-warrior-profiles-jane-kramer
6.https://www.themonthly.com.au/issue/2010/march/1348115559/emily-maguire/virgin
7. http://www.spectacle.org/1195/mack.html


# குழந்தைகளுக்கான 'சமூகக் கல்விச் சுற்றுலா'

விடுமுறை நாட்களிலும் ஜனநாயகமற்ற, சிமெண்ட் சுவர்களாலான வகுப்பறைகளுக்குள் நமது குழந்தைகளை முடக்காமல் - சுதந்திரமாக, அவர்களாகவே சமுதாயத்தைப் புரிந்துக் கொள்ளத் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்.

கடந்த ஆண்டு உணவு, உடைத் தேவைகளுக்கு அடிப்படையான விவசாயம், ஆடைத் தேவைக்கு அவசியமான ஆடை உற்பத்தி, இரண்டுக்கும் தேவையான மின்சார உற்பத்தி, அன்றாடத் தேவையான உணவுத்தயாரிப்பு, சக உயிர்களை மதிக்கத் தேவையான பாலின சமத்துவம், இவை அனைத்துக்கும் அடிப்படையாக இருக்க வேண்டிய அறிவியல் அணுகுமுறை ஆகிய வற்றை நேரடிக் காட்சிகளாக - சுற்றுலாவாகச் சென்று புரியவைத்தோம்.

இந்த ஆண்டு, தமிழ்நாட்டின் சிக்கல்கள், அதன் பின்னணிகள் பற்றி களத்திற்கு நேரடியாகச் சென்று பயில வழி அமைத்துள்ளோம். ஜல்லிக்கட்டு, மீத்தேன் திட்டம், கூடன்குளம் அணுஉலை, காவிரி - முல்லைப் பெரியாறு சிக்கல்கள், மோசடி மருத்துவங்கள், எதிர்காலக் கல்வி, ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை அமைப்புத் தலைவர்களுடன் உரையாடல் என- இளம் வயதிலேயே சமுதாயம் பற்றிய புரிதலை உருவாக்கவும், எதிர்காலம் குறித்துத் திட்டமிடவும் ஒரு சுற்றுலாவைத் முன்னெடுக்கிறோம்.

2017 மே 11 வியாழன் முதல் மே 15 திங்கள் வரை 5 நாட்கள் பயணம் - நன்கொடை: ஒருவருக்கு ரூ 2000 ( உணவு, தங்குமிடம், பயணக்கட்டணம் உட்பட) 11 முதல் 17 வயது வரை உள்ளவர்கள் மட்டும் பங்கேற்கலாம். பெரியவர்களும் வரலாம். அவர்களுக் கான கட்டணம் ரூ 2500. மே 1 க்குள் பாதித்தொகையைச் செலுத்தி வருகையை உறுதி செய்யுங்கள்.

தொடர்புக்கு :
ஆசிரியர் இரஞ்சிதா 98426 26686
Dr. பெரியார்செல்வி 98656 30383
மலரினியன் 98947 03804

மே 11-15
5-நாட்கள்
ரூ:2000

TEAM Life Science

தாராபுரம் பூங்கொடி

# மதம்

## பெண்ணடிமைத் தனத்தின் ஆணிவேர்



“மதம் என்பது நாட்டிற்கோ ஒரு சமூகத்திற்கோ ஒரு தனி மனிதனுக்கோ எதற்காக இருக்க வேண்டியது? ஒரு தேசத்தையோ சமூகத்தையோ கட்டுப்படுத்தி ஒற்றுமைப் படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? அது ஒரு மனிதனின் மனச்சாட்சிக்குக்கட்டுப்பட்டதா? அல்லது ஒரு மனிதனின் மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தக்கூடியதா? மனிதனுக்காக மதமா? மதத்துக்காக மனிதனா? என்பவைகளைத் தயவு செய்து யோசித்துப்பாருங்கள்”.- குடி அரசு - 11.09.1927

உலகில் இன்று, இனம், மொழி, மதம், ஜாதி, கலாச்சாரம், இருப்பிடம் இவைகளின் மீதான ஆதிக்கத்தை தக்கவைப்பதற்காக ஒருவர் மீது ஒருவர், ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு எப்போதும், ஏதோ ஒரு மூலையில் சண்டை நடந்து கொண்டேயிருக்கிறது.

தற்போது உலகமயமாதல் சூழலுக்கேற்ப பொருளாதாரத்தின் மீதும் சண்டை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. உலகத்தின் இயக்கவியலாக மாறிவிட்ட இந்தப் போரில் எப்போதும் முதல் பலி பெண்கள் தான். உள்ளூர்ச் சண்டை முதல் உலகளவில் நடைபெறும் போர்கள் வரை ஆயதங் களைப் பயன்படுத்தி எதிரிகளை அழிப்பதை விட, அடுத்த நாட்டுப் பெண்களின் உடல்கள் மீது நடத்தும் பாலியல் தாக்குதல்கள் தான் அனைவரையும் நிலைகுலையச் செய்கிறது.

இத்தகைய சண்டைகளுக்கு மிகவும் அடிப்படையான காரணிகளில் மதம் ஒரு முக்கியப் பங்குவகிக்கிறது. உலகம் பரிணாம வளர்ச்சியில் தான் உருவானது என்று டார்வின் போன்ற அறிஞர்களால் நமக்கு அறிவியல் கற்றுத் தரப் பட்டிருக்கிறது.

மதவாதிகளால் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே, மதமும் தோன்றியது என்ற வாதமும் வைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. முதலில் கிருத்தவம் தோன்றியதாகவும், அதன் பிறகு இஸ்லாம் தோன்றியதாகவும் கிருத்துவ மதவாதிகளும், இல்லை இஸ்லாம் தோன்றிய பின் தான் கிருத்துவ மதம், அதன் பின் மற்ற மதங்கள் தோன்றின என்று இஸ்லாமிய மதவாதிகளாலும் சொல்லப் படுகிறது. எது முதலில் தோன்றின என்ற பிரச்சனை நமக்குத் தேவையில்லை. அன்பையும், ஒழுக்கத்தையும் போதிக்கவே மதங்கள் தோன்றின என்ற சொல்லப்பட்ட கூற்று, பின்னாளில் எப்படி மனிதனை குறிப்பாக நமது பெண்களை அடிமைப் படுத்தியது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### கிறித்துவத்தில் பாலினப் பாகுபாடு

கிருத்துவ மதம் சொல்லும் ஆதாம் - ஏவாள் கதையில் கூட ஒரு கனியை கடவுளின் கட்டளையை மீறி உண்டதனால் இருவருக்கும் தண்டனை வழங்கப்படுகிறது. அதில் ஆதாமுக்கு மிக சாதாரணத் தண்டனையாக நீ குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு சிரமப்படுவாய் என்றும். ஏவாளுக்கு ஆதாமின் வித்தைப் பெற்று அதனால் கரு உண்டாகி மிகவும் சிரமப்பட்டு குழந்தைகளைப் பெற்றெடுப்பாய் என்று ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு வழங்குவார்.

இது கதையாக இருந்தாலும் அன்றே தொடங்கிவிட்டது பெண்களின் மீதான பாரபட்சமும் கொடுமையும். அனைவருக்கும் கல்வி, சமஉரிமை ஆகியன தான் கிருத்துவமதம் வளர மிகவும் உறுதுணையாக இருந்தன. விருப்பட்ட பெண்களுக்கு, கடவுள் ஊழியம் என்ற பெயரில் கன்னியாஸ்திரியாக மாறும் சூழலுள்ளது. இந்தக்

கன்னியாஸ்திரிப் பெண்களுக்கு அந்த மத குருமார்களால் பாலியல் கொடுமையும் அரங்கேறி வருகிறது என்பதை நாம் அவ்வப்போது செய்தித் தாள்களில் படிக்கிறோம்.

அனாதை இல்லங்கள் நடத்திவரும் மத குருமார்கள் ஒரு சிலர் அங்கிருக்கும் குழந்தைகள் மீது பாலியல் வன்முறையைப் புகுத்துகிறார்கள். சமீபத்தில் ஒரு பாதிரியார் பெண்கள் ஜீன்ஸ் போன்ற உடைகளை அணிந்தால், கை காலைக் கட்டிக் கடலில் தூக்கி எறியவேண்டும் என்று கூறினார். ஒரு பாதிரியாரால் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப் பட்ட கன்னியாஸ்திரி ஒருவருக்கு கேரளா-மலபார் சர்ச் ரூ12 லட்சம் நட்ட ஈடாக வழங்கியுள்ளது.

**இஸ்லாமியத்தில் பாலினப்பாகுபாடு**

இஸ்லாம் மதத்தில் பெண்களின் நிலை படுமோசமாகத் தான் உள்ளது. பெண்கள் பர்தா போடுவது, வாரிசுக்காக வயதில் மூத்த ஆண்கள், சிறுவயதுப் பெண்களைத் மணமுடிப்பது, பெண்களைப் பள்ளிவாசலில் அனுமதிக்க மறுப்பது, அஜ்ரத் பணியில் பெண்களை சேர்க்காமல் இருப்பது, மனைவியைப் பார்க்காமலேயே “தலாக்” என்ற வார்த்தையப் பயன்படுத்தி விவாகரத்து செய்து அதன் மூலம் பல மணம் புரிவது, பெண்களைப் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவே பாவிப்பது போன்ற கொடுமைகள் இன்றும் நடந்துவருகிறது.

பெண்கள் வெளியே செல்லும்போது தங்கள் உடம்பை முழுவதும் மறைக்கும்விதமாக பர்தா போன்ற ஆடை அணியவேண்டும். அந்நிய ஆடவர் முன்னால் செல்லக்கூடாது. தொழுவதற்காக பள்ளிவாசல் செல்லக்கூடாது. எந்த இறுதிச் சடங்குக்கும் செல்லக்கூடாது. *Prophet Mohamed- (Bukhari Hadis 1st vol-Book4-no149).*

கர்நாடகத்தின் சிமோகாவில் உள்ள சாகர தாலுக்காவைச் சேர்ந்த 22 வயது சுஹானா சையத் ஜீ டிவியில் நடைபெற்று வரும் நிகழ்ச்சி ஒன்றில் கன்னடப் படமான கஜாவில் வரும் “ஸிரீகரனே, சீனிவாசனே” என்ற பக்திப் பாடலைப் பாடி தன் குரலால் அனைவரையும் அசத்தினார். இதனை எதிர்த்து ‘மங்களூர் முஸ்லீம்’ என்கிற முகநூல் பக்கத்தில் ‘பிற மதத்து ஆண்களுக்கு மத்தியில் பாடல் பாடி பாராட்டுப் பெறுவது பெருமையல்ல’ என்றும் ‘இஸ்லாமிய மதத்துக்கே களங்கம் ஏற்படுத்திவிட்டீர்கள்’ என்றும் கண்டனம் தெரிவித்து பல பதிவுகள் வந்தன. இதன் எதிரொலியாக அந்தப் பெண் பாடிய பாடல் You Tube விருந்து நீக்கப்பட்டுவிட்டது.

உலகில் உள்ள முக்கியமான இரண்டு மதங்களும் பெண்களை எவ்வாறு நடத்துகின்றன என்று பார்த்தோம். வேறு எந்த மதத்திலும் பெண்கள் சிறப்பாக நடத்தப் படவில்லையா? என்றால் ஒரே ஒரு மதத்தைச் சொல்லாம். அது பவுத்தம் மட்டுமே. அதில் மட்டும் தான் பெண்களின் நிலை மிகவும் சிறப்பாக இருந்தது. பெண்கள் மிகவும் படித்தவர்களாகவும், குடும்பத் தலைவர்களாகவும்., மடங்களை நிர்வகிப்பவர்களாகவும், பல்கலைக் கழகங்களில் பணிபுரிபவர்களாகவும் இருந்தார்கள். ஏனென்றால் பவுத்தம் மதமாக எப்போதும் இருந்ததில்லை, அது ஒரு அறநெறியாகத் தான் இருந்தது. பின்னால் வந்த பார்ப்பனீயம் தான் அதை உள்வாங்கி மதம் என்று மாற்றியது.

**இந்து மதத்தின் அடிப்படையே அடிமைத்தனம்**

> **குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகளின் மூலம் ஒரு ஆண் தன் சாதிப் பழக்க வழக்கங்களைப் பெண் மீது திணித்து சாதி மற்றும் மத மூடப்பழக்கங்களையும் கூடுதலாக ஆணாதிக்கச்சிந்தனையும் வளர்க்கிறார்கள்.**

அடிமைத்தனத்திற்கென்றே ஒரு மதமிருக்கிற தென்றால் அது இந்துமதம் தான். பார்ப்பனர்கள் தாங்கள் பிழைப்பதற்கு வேதகாலத்திலிருந்து சடங்குகள், சம்பிராதயங்கள், மூடப்பழக்க வழக்கங்கள் போன்றவற்றை ஏற்படுத்தி மக்களை அறியாமை இருட்டில் தள்ளும் கொடுமைகளைச் செய்து வருகின்றனர்.

இந்து மதத்தில் ஒரு ஆண் தன்னுடைய பிறப்பிலிருந்து இறப்புவரை அவருடைய குல தெய்வத்தையே வழிபடுகிறார்கள். ஆனால் பெண் ஒரு வீட்டில் மகளாக இருக்கும்போது தன் தந்தையின் குலதெய்வத்தையும், மணமுடித்த பிறகு தன் கணவன் குடும்பத்தாரின் குலதெய்வத்தையும் வழிபட வற்புறுத்தப் படுகிறார். இந்தச் சடங்குகளின் மூலம் ஒரு ஆண் தன் சாதிப் பழக்க வழக்கங்களைப் பெண் மீது திணித்து சாதி மற்றும் மத மூடப்பழக்கங்களையும் கூடுதலாக ஆணாதிக்கச் சிந்தனையும் வளர்க்கிறார்கள்.

**கூட்டுக்குடும்பங்கள் அழிய வேண்டும்**

இந்து மதம் கூட்டு குடும்ப அமைப்பு முறையைக் காலம் தோறும் கட்டாயப்படுத்திக் கொண்டே வருகிறது. அப்போது தான் வீட்டில் மூத்தவர் பின்பற்றிய மூடப்பழக்கங்களையும், சடங்குகளையும் தொடர்ந்து கொண்டு செல்ல முடியும். அந்த வீட்டிற்குப் புதிதாக வரும் பெண்களுக்கு இது தான் இந்து மதம் என்று சொல்லாமல், இது தான் எங்கள் குடும்ப வழக்கம் என்று அந்த வீட்டுப் பெண்களாலேயே சொல்லப் படுகிறது. தான் கடைப்பிடித்த அடிமைத்தனம் வாழையடி, வாழையாக கைமாற்றப் பட்டுக் கொண்டே இருக்கிறது.

தனிக் குடும்ப அமைப்புகளில் பெண்கள் தங்கள் கருத்தை சொல்வதற்குச் சிறிதளவேனும் உரிமை உள்ளது. தனிக் குடும்பம் வேண்டும் என்று சொல்லும் பெண்களை இந்தச் சமூகம் எப்போதும் ஒரு விரோதியாகவே சித்தரிக்கிறது. ஆனால் காலப்போக்கில் நகரமயமாதல் மற்றும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக கூட்டுக் குடும்ப அமைப்பு குறைந்து கொண்டே வருகிறது.

தனிக்குடும்ப முறை பெண்கள் குறைந்த பட்சம் தங்களின் சுயவிருப்பு, வெறுப்புகளை வெளிப் படுத்துவதற்கு ஒரு வடிகாலாக அமைகிறது.

**இந்து மதத்திணிப்புகளான பெண்கள் அணியும், தாலி, குங்குமம், மெட்டி, மஞ்சள், போன்றவை கூட்டுக் குடும்ப முறையில் கட்டாயமாக்கப்பட்டு பெண்களை நிரந்த அடிமைகளாகவும், மதச் சடங்குகளை விட்டு எப்போதும் விலகாமல் வைத்திருக்கிறது.**

இந்து மதத்திணிப்புகளான பெண்கள் அணியும், தாலி, குங்குமம், மெட்டி, மஞ்சள், போன்றவை கூட்டுக் குடும்ப முறையில் கட்டாய மாக்கப்பட்டு பெண்களை நிரந்த அடிமை களாகவும், மதச் சடங்குகளை விட்டு எப்போதும் விலகாமல் வைத்திருக்கிறது. மாதவிடாய் சமயங்களில் பெண்களை வீட்டின் பின்பக்கம் எந்த விதமான வேலையையும் செய்யவிடாமல் தனிமைப்படுத்திவிடுவார்கள். வீட்டிலே இப்படி என்றால் கோயில்களில் அனுமதி என்பதே இல்லை. மேலும் கோயில் திருவிழாக்களுக்காக பெண்கள் இயல்பாக வரவேண்டிய 'மாதவிடாய்' சுழற்சி முறையை விழா முடியும் வரை தள்ளிப் போட மாத்திரை எடுத்துகொள்கிறார்கள். மணமாகாத பெண்கள் இந்த மாத்திரைகளை எடுத்துக் கொள்வதால் பிற்காலத்தில் பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாகிறார்கள்.

### ஒவ்வொரு வீட்டிலும் ஒரு காட்டுமிரண்டி

இதே போல் கோயில்களில் மணமுடிக்கும் பெண்களும் மண நாளன்று 'மாதவிடாய்' வந்துவிடக் கூடாது என்பதற்காக மாத்திரைகளை எடுத்து தள்ளிப்போடுகிறார்கள். ஒரு வீட்டில் தந்தையோ, சகோதரனோ அல்லது மகனோ சாமிக்கு மாலை என்ற பெயரில் அணிந்து கொண்டு காட்டு மிராண்டியாய் திரியும் போது, வீட்டில் உள்ள பெண்களுக்கு 'மாதவிடாய்' ஏற்பட்டால் அந்த அம்மாவோ, மகளோ அல்லது சகோதரியோ இந்த காட்டுமிராண்டிகளின் முகத்தில் முழிக்கக் கூடாது என்றும் சமைக்கவும் கூடாது என்று சொல்லி அவரை வேறு யாராவது உறவினர் வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள்.

இந்த உலகில் அனைத்து உயிரினங்களும், ஏன் மேலே சொன்ன காட்டுமிராண்டிகளும் தோன்று வதற்குக் காரணமாக இருப்பதுதான் பெண்களின் இந்த 'மாதவிடாய்'. வேறு எந்த மதத்திலும் இந்தக் கொடுமை இல்லை. இந்துமதத்தில் மட்டும்தான் பெண்களின் வாழ்க்கையில் இயல்பாகவும், அறிவியல் ரீதியில் சரியான ஒன்றை 'தீட்டு' என்று சொல்லிப் பெண்களைக் கொச்சைப் படுத்துகிறார்கள். பெண்களைப் பூசாரியாக எந்தக் கோயிலிலும் அனுமதிப்பதில்லை. இன்னும் ஒரு சில கோயில்களில் (சபரிமலை) 'மாதவிடாய்' ஏற்படும் பெண்களை 'மாதவிடாய் ஏற்படாத காலங்களில் கூட 'பக்தையாகக் கூட அனுமதிப்பதில்லை.

பார்ப்பனக் கூட்டம் தன் இனம் வளர்வதற்காக இல்லாத ஒரு மதத்தை ஏற்படுத்தி, உலகில் எந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு மதச் சடங்கு களையும் அதன் மூலம் அடிமைத் தனத்தையும், குறிப்பாக பெண் அடிமைத் தனத்தையும் ஏற்படுத்தி அதை நாமே பின்பற்றுமாறு செய்துள்ளது. இது தான் பார்ப்பன உக்தி.

மதங்கள் உலகில் அன்பையும், ஒழுக்கத்தையும் போதிக்கவே தோன்றின என்று சொல்லப் படுகிறது. ஆனால் மதங்கள் இந்த வேலைகளை விட மூட நம்பிக்கையும், அடிமைத்தனத்தையும் தான் அதிகம் வளர்க்கின்றன. மதம் எப்போதும் தத்துவங்களாக மட்டும் தான் இருக்க வேண்டும். தத்துவங்களாக இல்லாமல் இருக்கும் போது தான் 'எது பெரியது' என்ற குழப்பம் ஏற்பட்டு நாட்டில் மதச் சண்டை களும் அதனால் பல்லாயிரக்கணக்கான உயிர்களும் பலியாக நேருகிறது.

மதத்தின் பெயரால் பல நூறு ஆண்டுகளாக நடக்கும் சிலுவைப் போரைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். ஒரே மதத்தில் உள்ள சன்னி, ஸியா பிரிவு முஸ்லீம்கள் ஈராக்கில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு பல ஆயிரம்பேர்கள் இறந்ததையும் நாம் மறந்துவிட முடியாது. இலங்கையில் பவுத்தம் 'நெறியாக' இல்லாமல் மதவெறியாக மாறியதால் பல இலட்சம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப் பட்டார்கள். இங்கும் இந்து மதத்தின் பெயரால் எண்ணற்ற மக்கள் கொல்லப்பட்டதற்கு நாம் எல்லோரும் தான் நிகழ்கால சாட்சியங்கள்.

**ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு சுடர் உண்டு - அவர் ஆசிரியர், சுடரை அணைப்பவர் உண்டு - அவர் மத குரு.**
**- விக்டர் ஹுகோ**

**மதம் என்கிற விசயங்களும் நமக்குப் பெரிய ஆபத்தாகவே இருக்கிறது. மதம் என்பதை ஒழுக்கத்திற்கான கொள்கைகள் என்பதாகவே எண்ணாமல் சில சடங்குகள் என்பதாகவே கற்பிக்கப்பட்டிருக்கிறது.**
*தோழர் பெரியார், 18.09.1927 குடி அரசு*



**ஜெய்சாந்தி**, பல்லடம்

# கைம்பெண்



கணவனை இழந்து வாழும் ஒரு பெண் தனக்குள்ளே ஒரு கோடு போட்டுக் கொண்டு அதைத் தாண்டாமல் தன் பிள்ளைகளைக் காப்பாற்ற, அவர்களை வாழ்க்கையில் கரைசேர்க்க - காட்டிலும், மேட்டிலும் கஷ்டப்பட்டுத் தன் பிள்ளைகளைக் கூலிவேலை செய்தாவது காப்பாற்ற அடிமை வாழ்க்கை முறையை மேற்கொள்கிறாள்.

உற்றார், உறவினர் துணையின்றி அந்தப் பெண் தன் தந்தையை இழந்த குழந்தைகளை வைத்துக் கொண்டு வறுமை என்னும் வாட்டம் தெரியாமல் வளர்க்கிறாள். ஆனால், தனக்கு தன் இளம் வயதில் இருக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு தன் பிள்ளைகளே தனக்கு உலகம் என்று நினைக் கிறாள்.

விடிகாலையில் அந்தக் கிராமத்தில் உள்ள குடியானவர் வீட்டில் சின்னச் சின்ன வேலைகளைச் செய்து ஒரு வருமானத்தையும், அதற்குப் பின் தினமும் கூலி வேலை செய்து ஒரு வருமானத்தையும், பற்றாக்குறைக்குப் புதன்கிழமை கந்து வட்டிக்கு வாங்கியும் தன் பிள்ளைகளுக்கும் தனக்குமான குடும்பத் தேவையை பூர்த்தி செய்கிறாள்.

ஆண் - பெண் இருவரும் சம அளவு உடல் உழைப்பு செலுத்தினாலும், ஒரே வேலைக்குக் கூட கொடுக்கப்படும் கூலியில் பெண்களுக்கு சரி பாதிக்கும் குறைவாகவே கொடுக்கப்படுகிற நிலையே உள்ளது.

அந்தப் பெண்ணுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் கூட தன் பிள்ளைகள் பட்டினியாகி விடுவார்கள் என்று நினைத்துக்கொண்டு முடியாத நிலையில் கூட தோட்டத்து வேலைக்குச் சென்றால், நான்கு பேருடன் பேசிச் சிரித்தால் உடம்பில் உள்ள வலியே தெரியாது என்று அன்று வேலை செய்த காசை வைத்து சோறு வடித்து, தன் பிள்ளைகள் உண்ட பின், மீதிச் சோற்றைச் சாப்பிட்டு, அடுத்த நாள் வேலைக்கு எங்கு செல்வது என்று விசாரித்த பின் உறங்குவாள்.

**மனதளவிலும் ஒடுக்கும் இந்து மதம்**

ஆனால், அதே ஊரில் உள்ள ஆண்களிடம் இயல்பாக பேசினால், இந்தச் சமுதாயம் தவறான உறவாகத்தான் நினைத்துக்கொள்கிறது. அந்தப் பெண் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் சுதந்திரமாக பொதுத்தெருவில் நடந்தால் காலையிலேயே "முண்டச்சி" முகத்தில் முழித்தால் அன்றைய நாளே விளங்காது என்று சொல்கிறது. இந்த இந்து மதச் சமுதாயம்.

பண்டிகை, திருவிழா நாட்களில் கூட - அது மட்டும் அல்ல உற்றார், உறவினர் வீடுகளில் கூட முதல் நபராக இல்லாமல் "சடங்கு, சம்பிரதாயம்" நல்ல நேரம் முடிந்த கடைசி நபராக அந்தப் பெண் தள்ளப்படுகிறாள். .மனம் உடைந்து தன் உறவினர் வீடுகளுக்கு மகிழ்ச்சியுடன் தானும் தன் பிள்ளைகளை அழைத்துச் செல்வதை நிறுத்தி விடுகிறாள்.

தனியாக வாழ்ந்தால் தன் வயது வந்த பிள்ளைகளையும் தன்னையும் தவறாக பேசுகிறது. தன்னுடன் வயதான அம்மாவையும் வைத்துக் கொண்டு பிள்ளைகளையும் பராமரிக்கிறாள்.

கணவனை இழந்த பெண்ணுக்கு தாலி அறுக்கும் போதும், அலங்காரம் செய்து பூவை அறுத்துப் பொட்டு அழித்து வளையல்களை உடைத்து இந்தச் சடங்குகளைச் செய்வதற்கும் மற்றொரு பெண் விதவையாகவே இருக்க வேண்டுமாம். அந்தப் பெண்ணை மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் துன்பப்படுத்து கின்றனர் .இதுதான் இந்து மதச் சடங்கு என்று மனு சாஸ்திரம் கூறுகிறது.

ஆனால், அதே ஆண் எத்தனை பெண்களுடன் உறவு வைத்துக் கொண்டாலும் எத்தனை திருமணம் செய்து கொண்டலும் தவறு இல்லையாம். தான் பெற்ற பிள்ளைகளை நினைக்காமல் மறுமணம் செய்து கொள்கின்றனர். "பெண் கணவனை இழந்தால் இந்த சமுதாயம் "விதவை" என்கிறது. ஆனால் ஆண் மனைவியை இழந்தால் "விதவன்" என்று சொல்லுவதில்லையே... இந்த இந்து மதச் சமுதாயத்தில் இதுவரை இல்லையே?

திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங் களில் விதவைப் பெண்களை தனியாகவும் அவமானப் படுத்தும் விதமாகவே அமைக்கின்றனர். இன்றைய ஊடகங்கள் 'பண்பாடு' என்ற பெயரில் பெண்களை இழிவுபடுத்தி நவீன மனுசாஸ்திரத்தை பிரதிபலிக்கின்றன.

இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான குறிப்பாக (கைம்பெண்) பெண்களுக் கான உரிமைகளை மீட்டு சாதி-மதச் சடங்குகளை உடைத்து விடுதலைப் பெண்ணாக மாற்றுவோம்.

நிர்மலா, மதுரை

# ஆடைக் கட்டுப்பாடா? மனக் கட்டுப்பாடா?

உலகத்தில் தோன்றிய பாலினம் இரண்டே. அதில் ஒரு பாலினத்திற்கு ஆடைச் சுதந்திரம், அடுத்த பாலினத்திற்கு ஆடைக் கட்டுப்பாடு. சுதந்திரத்தை ஆடையிலும் கூட அனுபவிக்க முடியாத இழிவான நிலையில் பெண் என்ற பாலினம் உள்ளது. இதற்குக் காரணம் ‘கட்டுப்பாடு’ என்ற வார்த்தையிலேயே மற்றொருவர் பிறர் மீது விதித்த தடை அல்லது திணிக்கப்பட்ட தன்மையாகும்.

ஆடைக்கட்டுப்பாடு என்பதன் அளவு என்ன? கட்டுப்பாடான பெண்ணுக்கேற்ற ஆடை எது என்பதை இந்து மதம் வரையறுத்துள்ளதா? சேலை, தாவணி கட்டிய பெண்ணை ஆடைக் கட்டுப் பாடான பெண் என்று கூறலாமா? சேலை, தாவணி அணியாத மற்ற நாட்டுப் பெண்கள் எல்லாம் எப்படி உள்ளனர். அவர்கள் ஒழுக்கமாக இல்லையா? சேலை, தாவணி கட்டிய பெண்கள் பயணிக்கும் போது கைகளைத் தூக்கும்போது தவறான பார்வைக்கு உள்ளாக்கப்படுகிறாள். இதுவே ஒரு பேண்ட் சர்ட் அணிந்த பெண் அந்தத் தவறான பார்வைக்கு ஆளாகப் போவதில்லை.

**பெண்களின் உயிரைப் பறிக்கும் சேலை, தாவணிகள்**

1997ல் தஞ்சை குடமுழுக்கில் யாகம் வளர்த்த போது பந்தல் தீ பற்றி எறிந்து தீயில் சிக்கி 41 பேர் பரிதாபமாக இறந்தனர். இதில் 41 பேரில் 31 பேர் பெண்கள். இதற்கு காரணம் என்ன? என்று சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்ததில் பெண்கள் உடுத்திய புடவையால்தான் அவர்களால் விரைந்து ஓடி தப்பிக்க முடியவில்லை என்று அந்த மையம் கூறியுள்ளது.

கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் பெண்கள் அதிகமாக எந்திரங்களில் சிக்கிக் கொள்வதற்கு அவர் அணியும் புடவைதான் காரணம். இரு சக்கர வாகனங்களில் சேலை துப்பட்டா சிக்கி விபத்துக் குள்ளாவதை நாள்தோறும் பார்க்கிறோம்.

16 முழத்தில் புடவைகளை உடல் முழுவதும் சுற்றிச் சுற்றி கட்டுவது என்பது பெண்களுக்கு வசதிக் குறைவு. ஒரு அவசர நேரத்தில் தப்பிப் பிழைக்க, வேகமாக வெளியேறிட இது தடையாக இருக்கிறது. பெண்கள் ஆண்களைப் போல உடை உடுத்த வேண்டும். ஆண் பெண் வித்தியாசம் காட்டத் தேவையில்லை என்று பெண்கள் உடை சம்பந்தமாக தந்தை பெரியார் 70 ஆண்டுகளுக்கு முன்பே கூறிய கருத்து எவ்வளது ஆக்கப் பூர்வமானது என்று சிந்திக்க வேண்டும்.

**உன் காம விழிகளுக்கு நீ பூட்டுப்போடு**

பெண்களுக்கு கோயில்களில் ஆடைக் கட்டுப்பாடு விதிக்கும் அறிவிலிகள் சல்லடையான வேட்டி கட்டி ஆபாசமாய்த் திரியும் பூணூல் பூசாரிகளுக்கு தடை விதிப்பதில்லை ஏன்?

**“பக்திமயமான இடத்தில் பெண்களின் ஆடைக்கென்னடா கட்டுப்பாடு. உன் காம விழிகளுக்கு நீ பூட்டுப்போடு.”**

ஆடைக் கட்டுப்பாட்டுக்குக் காரணம் பாலினக் கோளாறு இல்லை. பார்வைக்கோளாறு ஆகும். இன்றைய சூழலில் இயல்பான ஒரு ஆண் அரை நிர்வாணமாக வெளியே சென்றாலும் இயல்பான பார்வையாக இரு பாலினத்திலும் பார்க்கிறோம். ஆனால் மனநிலை சரியில்லாத ஒரு பெண் சற்று விலகிய ஆடை அணிந்தாலும் கூட அதை ஆண்கள் ஓர் காமப் பார்வையில் பார்க்கிறார்கள்.

ஓர் ஆண் மற்றவர்கள் மத்தியில் தனது ஆடைகளை கழற்றி மாற்றுவதை இயல்பாக பார்க்கிறார்கள். அங்கே அவனுக்கு ஆடை நாகரிகம்



கற்றுக் கொடுக்கப்படவில்லை. அதே வேளை பெண் குழந்தையாக இருந்தால் கூட அவள் ஆடை மாற்றுவதைப் பார்க்கும் போது அதன் எதார்த்தத்தை உணராமல் அதை இழிவாகவோ அல்லது காமமாகவோ பார்க்கும் தன்மை இயல்பாகவே திணிக்கப் படுகிறது.

வீட்டில் உள்ள பெண்கள் உள்ளாடைகளைத் துவைத்து உலர்த்தும்போது கூட மறைவாகவோ, ஓரமாகவோ போடும் நிலை உள்ளது. ஆனால், ஆண் தனது உள்ளாடையை தனது சட்டையுடன் சேர்த்து ஆணியில் மாட்டுவது பெருமையாக உள்ளது. இதை நாம் கண்டித்து வளர்ப்பதில்லை.

வெளியிடங்களுக்குச் செல்லும்போது ஆண் தன் மனைவியிடம் குளிக்கச் செல்லும்போது சத்தமாக “ஜட்டி பனியன் எடுத்துத் தா” என்று கட்டளை இடுகிறான். ஒரு பெண், தன் கணவனிடமோ, தந்தையிடமோ, சகோதரனிடமோ அப்படி சத்தமாகக் கேட்டுவிடமுடியுமா? பெண்

உள்ளாடை களுக்கான பிரத்தியேகமான கடைக்குச் சென்றாலும் கூட தனக்கு ‘பிரா, பேண்ட்டி’ வேண்டும் என்பதை இயல்பாகக் கூட சொல்லமுடியவில்லை என்னடா சமூகம் இது?

துணிக்கடையில் பொம்மைக்குக் கட்டிய ஆடை விலகினாலும் கூட அதை ஓர் பெண்ணாகப் பாவித்து காம உணர்ச்சிக்கு ஆண் உந்தப்படுகிறான். இப்படி ஆண் வர்க்கம் தம் பார்வையின் தன்மையை மாற்றிக்கொள்ள இயலாத - முடியாத - மாற்ற நினைக்காத தன்மைக்காக இவை அனைத்தையும் பெண் இனத்தின் மீது ஆடைக்கட்டுபாடாக விதிக்கிறது.

நாம் ஒரு விசயத்தைப் பற்றி யோசிப்போம். பெண்ணுக்கு ஆடைக்கட்டுப்பாடு ஏன் விதிக்க வேண்டும்? யார் பார்வையிலிருந்து பெண்ணைக் காப்பாற்ற? அரைகுறை ஆடையுடன் இருந்தால் அந்தப் பெண் பாலியல் தொல்லைக்கு ஆளாவாள் என்ற ஒரு வாதம் வேறு. இதில் பெரிதும் பாதிக்கப்படுவது பெண் தான்.

அப்போ பெண்ணின் ஆடையைக் கட்டுப் படுத்த வேண்டுமா ஆணின் பார்வைத் தன்மையில் கட்டுப்பாடு வேண்டுமா? கட்டுப் பாடான ஆடை அணிந்த எந்தப் பெண்ணிற்கும் பாலியல் தொல்லை இல்லவே இல்லை என்று நாம் உறுதி கூற முடியுமா? சமுதாயத்தில் இந்த நிலை மாற ஆண் - பெண் என்று இரண்டு பாலினத்தவருக்கும் ஒரே மாதிரியான கட்டுப்பாடுகள் ஒரே மாதிரியான வளர்ப்பு முறைகள் இருக்க வேண்டும். அதே போல் பாலினக் கல்வி, பாலின ஒழுக்க முறைகள் போன்றவற்றை இரண்டுபேருக்கும் சமமாக கற்பிக்க வேண்டும்.

ஓர் ஆண், ஒரு பெண்ணைப் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தும்போது, அதனால் ஓர் பெண்ணுக்கு பாதிப்பு என்ற நிலை கற்றுக் கொடுக்காமலேயே பரவியுள்ளது. ஆனால் அந்த ஆணுக்குத்தான் அதனால் மிகுந்த இழிநிலை, மற்றவரால் இழிவாகப் பார்க்கப்படுதல் சமுதாயத்தில் மதிப்புக் குறையும் தன்னுடைய சுயம் பாதிக்கப்படும், தனது கற்புக்கும் அவமானம் என்று ஆணுக்கு பசுமரத்தாணி போல் பதியும்படி வளர்க்க வேண்டும் கற்பிக்க வேண்டும்.

பெண்களே நன்றாக ஓடியாடி விளை யாடுங்கள் அதற்கேற்ற ஆடைகளை நீங்களே தேர்வு செய்யுங்கள். லெங்கின்ஸ் அணிவதும் ஜீன்ஸ் அணிவதும் உங்கள் உரிமை உங்கள் வசதி. பெற்றோர் களே உங்கள் பிள்ளைகளுக்கு மதப்பண் பாட்டை யும் நாகரீகத்தையும் திணிக்காமல் பெண்கள் முன்னேற்றத் திற்கேற்ற நாகரீக உடையணியப் பழக்குங்கள். உடை விசயத்திற்கு பயந்தே பெற்றோர் கள் பெண்களை விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க விடுவதில்லை. இது தவறானது.

**ஆண் தன் மனைவியிடம் குளிக்கச் செல்லும்போது சத்தமாக “ஜட்டி, பனியன் எடுத்துத் தா” என்று கட்டளை இடுகிறான். ஒரு பெண், தன் கணவனிடமோ, தந்தையிடமோ, சகோதரனிடமோ அப்படி சத்தமாகக் கேட்டுவிட முடியுமா?**

பெண் காவலர்களையும் இராணுவ வீராங் கனைகளையும் பாருங்கள். அவர்கள் உடன் பணி யாற்றும் ஆண்களுக்கு இணையாக எவ்வாறு செயல்படுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் உடை முறையே. எந்தச் செயலையும் செய்ய ஆடை ஒரு தடையாக இருக்கக்கூடாது.

ஆகையால், இனி வரும் காலங்களில் ஆடைக் கட்டுப்பாடு என்ற ஒரு செயல் பெண்களுக்குத் தேவை யில்லை. மாறாக அவர்கள் நல்ல கல்வியறிவும், சிறந்த பகுத்தறிவும், சமுதாயச் செயல்பாடுகளில் பங்கேற்கும் சுதந்திரமும், தற்காப்புக் கலையும் பெற்று ஆணுக்கு நிகரான பாலினமாக மாற வேண்டும்.

## காட்டாறு

**2017 மே - 2018 ஏப்ரல்**
**ஆண்டுக்கட்டணம் சேகரிப்புப் பணி**

ஏப்ரல் 1 முதல் மே 1 முடிய காட்டாறு ஏட்டிற்கு ஆண்டுக்கட்டணம் சேகரிப்புப்பணி நடைபெற உள்ளது. ஆன்லைனில் ஆண்டுக் கட்டணம் செலுத்துவோர்,

ASURAN OODAKAM,
KVB, Periyakulam Branch, Current A/c,
1176115000003502, IFSC: KVBL0001176

என்ற கணக்கில் செலுத்திவிட்டு, பணம் செலுத்திய விபரத்தை பெரியகுளம் தோழர்.குமரேசன் 99943 65133 எண்ணுக்கு SMS அனுப்பி விடவும். முகவரிகளை தோழர் இராவணன் எண்ணுக்கு 97868 89325 அனுப்பிவிடவும்.

காட்டாறு ஏட்டின் ஆண்டுக் கட்டணச் சேகரிப்புப் பணி ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாளில் தொடங்கி, குறிப்பிட்ட நாளுக்குள் முடிவடையும் என்பதை அனைவரும் அறிவோம். திட்டமிட்டபடி மே 1 க்குள் ஆண்டுக்கட்டணங் களையும், முகவரிகளையும் செலுத்தி, பணிகள் தொய்வின்றி நடக்க உதவுங்கள். நன்றி.

# கற்பு என்றால் என்ன?

நாசமாகப் போகிற ‘கற்பு’

‘கற்பு’ என்று சொல்லி நம் பெண்களை எவ்வளவு கேவலமாக ஆக்கிவிட்டார்கள். பார்ப்பானோ மிகக் கெட்டிக்காரன், ஆயிரம் பேரை அவள் பார்த்திருந்தால் கூட அவளைப் பத்தினியாக்கி விடுவான். சீதை, துரோபதை, தாரை இவர்களே அதற்கு உதாரணம். கற்பு என்றால் இரண்டு பேருக்கும் ஒரே மாதிரியாக அல்லவா இருக்க வேண்டும்? பைத்தியகாரத்தனமாக மூட நம்பிக்கைகளைப் புகுத்தி பாழாக்கி விட்டார்கள்.

கட்டுப்பாட்டிற்காகவும் நிர்ப்பந்தத்திற் காகவும் கற்பு ஒரு காலமும் கூடாது! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும் காதல் அன்பிற்காகவும் இருவரையும் கற்பு என்னும் சங்கிலியால் எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டட்டும். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கிற கற்பு மாத்திரம் அடிமைப்படுத்து வதில் ஆசை, மூர்க்கத்தனமே அல்லாமல், அதில் கடுகளவு யோக்கியமும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை.



பாவத்திற்குப் பயந்து பதிவிரதையாய் இருப்பவளும், காவலுக்குப் பயந்து பதிவிரதை யாயிருப்பவளும், மானத்திற்குப் பயந்து பதி விரதையாய் இருப்ப வளும் ஒரே யோக்கியதை உடைய வளே ஆவாள் என்கிறார் பெரியார்.

அம்பேத்கரின் கருத்தியல் புரிதலுடன் சேர்த்து பெண்களுக்கான மனுதர்ம விதிகள் சில வற்றைப் பார்ப்போம்.

1. ஆண்களைத் தவறு செய்யத் தூண்டுவதே பெண்களின் இயல்பு. ஆகவே, அறிவுடையோர்,பெண்களுடன் இருக்கும்போது கவனக் குறைவாக இருக்கமாட்டார்கள். (எச்சரிக்கையாகவே இருப்பார்கள்) (2:213)

2. பெண்கள் (ஆண்களின்) அழகைப் பற்றியும், வயதைப் பற்றியும் பொருட்படுத்துவது இல்லை. அவன் ஒரு ஆண் என்பது மட்டுமே போதுமானது. அழகானவர்களாக இருந்தாலும் சரி, விகாரமானவர்களாக இருந்தாலும் சரி எப்படி இருந்தாலும் தங்களை ஒப்படைத்துக் கொண்டு விடுவார்கள்.(9:14)

3. ஆண்கள் மேலுள்ள ஆசையினாலும், சலனப்புத்தியினாலும், இயல்பாகவே இதய மில்லாதவர்களாக இருப்பதனாலும், பெண்களை அவர்களின் கணவன்மார்கள் எவ்வளவுதான் பாது காப்புடன் காத்து வந்தாலும் துரோகமே இழைப் பார்கள் (9:15)

4. படைக்கும்போது கடவுள் இத்தகைய இயல்புடன் அவளைப் படைத்துவிட்டான் என்பதை அறிந்து, ஆண்கள் அவர்களைப் பாதுகாக்க கவனத்துடன் செயல்படவேண்டும்.(9:16)

5. பெண்களைப் படைக்கும்போதே அவர்களுக்கு என்று படுக்கை, இருக்கை, அணிகலன்கள் (ஆகியவற்றில் விருப்பம்) கேவலமான ஆசைகள், சினம், நேர்மையின்மை, தீய நடத்தை ஆகியவற்றையும் படைத்தார்.(9:17)

6. இரவும், பகலும் தங்கள் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களைத் தங்கள் கண்காணிப்பிலேயே ஆண்கள் வைத்திருக்க வேண்டும். அவர்கள் புலன் இன்பங்களில் தோய்ந்தவர் கள் ஆதலால், ஒருவர் கண்காணிப்பின் கீழ்தான் அவர்கள் இருக்க வேண்டும்.(9:2)

7.பெண்கள் குழந்தை யாக இருக்கும் போது தந்தையின் பாதுகாப்பிலும், திருமணத்திற்குப் பின் கணவன் பாதுகாப்பிலும், வயதான காலத்தில் மகனின் பாதுகாப்பிலும் இருக்க வேண்டும்.பெண் ஒருபோதும் சுதந்திரமாக இருக்கத் தகுதி யற்றவள்.(9:3)

8. தீய விருப்பங்களுக்கு எதிராக - அவை எவ்வளவு தான் சிறியதாகத் தோன்றினாலும் பெண்களை குறிப்பாகப் பாதுகாக்க வேண்டும். இல்லையெனில் அவை இரு குடும்பங்களுக்கும் துன்பத்தையே தரும்.(9:5)

9. பெண் குழந்தையாக இருக்கும்போதும், சிறுமியாக இருக்கும்போதும், வயதானவளாக இருக்கும் போதும் சுயமாக எதையும் செய்யக் கூடாது. தன் சொந்த வீட்டிலும் கூட அவ்வாறு செய்யக் கூடாது.(5:147)

10. தன் தந்தை, கணவன் அல்லது பிள்ளைகளை விட்டுத் தனியே வாழ பெண் முயற்சிக்கக் கூடாது. காரணம், இவர்களை விட்டுத் தனியே செல்வதின் மூலம் இரு குடும்பத்தாருக்கும் அவமதிப்பையே உண்டாக்குகிறாள். பெண்ணுக்கு மணவிலக்கு உரிமை இருக்கக்கூடாது.(5:49)

11. கணவன் மனைவியுடன் சேர்ந்தே இருக்க வேண்டுமென கூறப்படுகிறது. இதன் பொருள், ஒரு

பெண்ணுக்கு மணம் முடித்த பின் பிரிதல் என்பதே கூடாது என்பதாகும். (9:45)

12. விற்று விடுவதானாலோ அல்லது தனக்குச் சொந்தமில்லை என மறுப்பதனாலோ மனைவி கணவனிடமிருந்து விடுபட முடியாது. (9:46)

13. மனைவி, மகன், அடிமை ஆகிய இவர்கள் சொத்து வைத்திருக்கக்கூடாது என அறிவிக்கப் படுகிறது. அவர்கள் சம்பாதிக்கும் சொத்து அவர்கள் யாருக்குச் சொந்தமோ அவர்களை அடைகிறது. (9:146)

14. மனைவி, மகன், அடிமை, சீடன், உடன் பிறந்த தம்பி ஆகிய இவர்கள் தவறு செய்தால் கயிறு அல்லது பிரம்பின் மூலம் அடிக்கலாம். (8:299)

15. தந்தை யாரிடம் ஒப்படைக்கிறாரோ அல்லது தந்தையின் அனுமதியின் பேரில் தன் சகோதரன் யாரிடம் ஒப்படைக்கிறானோ அவருக்கு சாகும் வரை அவள் கீழ்படிந்து நடக்கவேண்டும். அவர் இறந்து விட்டால் அவர் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடாது. (5:151)

இவ்வாறாக மனு, பெண்களை தீய நடத்தை உள்ளவர்களாகவும்,கற்பொழுக்கம் பேண வேண்டிய வர்களாகவும் தனி ஆளுமைக்கும், சுதந்திரத்திற்கும் தகுதி அற்றவர்களாகவும், பாலியல் பொருட்களாக மட்டுமே சுருக்கி பெண்களைச் சூழ்ச்சியான புத்தி சாலித்தனத்துடன் வீட்டில் முடக்கினர்.

- மதங்களின் பார்வையில் கற்பு

**கற்பைப் பற்றி இன்றைய தலைமுறையின் கருத்துகள்**

*கற்பு என்று ஒன்று இல்லவே இல்லை. அப்படி இருப்பதாய் நினைத்தால் அது அவரவரின் (ஆண், பெண்) தனி மனித ஒழுக்கம் அதை அவரவர் பின்பற்றினால் போதும். (Vaishu)

*ஒரு பெண்ணா, கற்பைப் பற்றி பேசவே பயமாக இருக்கு.... காரணம் கற்பைப் பற்றி பேசிய பெண்கள் கேவலப்படுத்தப்படுகிறார்கள்....கற்பைப் பேசுகிற உரிமை கூட ஒரு ஆணின் கையில்தான் உள்ளது. கற்பு என்பது இன்றைய காலகட்டம் வரை ஒரு ஆண்,பெண்ணிற்கு வைக்கிற வரையறையாகவே உள்ளது. (Gowthami)

* 100 சதவீதம் கற்பு என்பது ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்கிற ஒரு உயர்ந்த பண்பு....அன்பு,நேர்மை எப்படி வடிவம் கிடையாத உணர்வோ, கற்பும் அதே போன்று உளம் சார்ந்த உன்னத உணர்வு.... ஆண், பெண்ணுக்கும் பொதுவான ஒன்று.

**இந்துகளின் பார்வையில் கற்பு**

இந்திய நாட்டைப் பொறுத்தவரை திருமணத் திற்கு முன் பெண்ணின் கற்பு அல்லது கன்னித் தன்மை மிக முக்கியமான ஒன்றாகும். திருமணத் திற்கு முன் கன்னித்தன்மை இழந்த பெண் திருமணம் செய்யத் தகுதியில்லாதவராகவே சமுதாயத்தால் பார்க்கப் படுகிறார்கள்.

**இசுலாம் மதத்தில் கற்பு**

இசுலாம் மதத்தில் கற்பு மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இசுலாம் மதச் சட்டத்தின் படி திருமணத்திற்கு முன் கற்பிழந்த பெண் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்கிறது.

**கிறிஸ்துவ மதத்தில் கற்பு**

கிறிஸ்தவ மதத்தில் கடவுள் மனிதருக்குத் தந்த பத்துக் கட்டளைகளில், ஏழாவது கட்டளை விபச் சாரம் செய்யாதே என்றும், ஒன்பதாவது கட்டளை யில் பிறர் மனைவியைக் கவர்ந்திட விரும்பாதே என்றும் கட்டளையிடுகின்றன.

கற்பு என்ற வார்த்தையைப் பகுபதமாக்கிப் பார்ப்போமானால் ‘கல்’ என்பதிலிருந்து வந்த தாகவும் அதாவது படி - படிப்பு என்பது போல் கல் - கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது.

அதேபோல் ஆங்கிலத்தில் (Viginity) வர்ஜினிட்டி என்பது (chastity) ‘செஸ்டிடி’ என்பதே பொருள் ஆகும். அதை அந்தப் பொருளின்படி பார்த்தால் இது ஆணுக்கென்றோ பெண்ணுக் கென்றோ சொல்லாமல் பொதுவாக மனித சமூகத்திற்கே எவ்வித ஆண், பெண் புணர்ச்சி சம்பந்தமே சிறிதும் இல்லாத பரிசுத்தத் தன்மைக்கே உபயோகப்படுத்தப்படுகிறது என்பதைக் காணலாம்.

ஆகவே கற்பு என்பது ஆணோ, பெண்ணோ ஒரு தடவை கலந்த பிறகு எவ்வளவு சுத்தமா யிருந்தாலும் கற்பு போய்விடுகிறது என்பது பெண் அடிமைத்தனமும் இந்து மதத்தின் ஆதிக்கமும் ஒழிய வேறொன்றுமில்லை.

“உண்மையாகப் பெண்கள் விடுதலை வேண்டு மானால், ஒரு பிறப்பிற்கொரு நீதி வழங்கும் நிர்பந்தக் கற்பு முறை ஒழிந்து இரு பிறப்பிற்கும் சமமான சுயேட்சைக் கற்பு முறை ஏற்படவேண்டும். கற்புக்காக பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும் படியான நிர்பந்தத் திருமணங்கள் ஒழியவேண்டும். கற்புக்காக மனதில் தோன்றும் உண்மை அன்பை - காதலை மறைத்துக்கொண்டு காதலும் அன்பும் இல்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும்.

எனவே, இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிரிவில் உண்மைக் கற்பை, இயற்கைக் கற்பை, சுதந்திரக் கற்பைக் காணலாமே ஒழிய, நிர்ப்பந்தங்களாலும் ஒரு பிறப்பிற்கொரு நீதியாலும், வலிமை கொண்டவன் வலிமை அற்றவனுக்கு எழுதிவைத்த தர்மத்தாலும், ஒருகாலும் காணமுடியாது என்பதுடன் அடிமைக்கற்பையும், நிர்ப்பந்தக் கற்பையும் தான் காணலாம்.”

- தோழர் பெரியார்

# ஆண்களுக்குச் சற்று விடுதலை கொடுப்போம்!



தேவகி

உலகில் பிறநாடுகளை விட இந்தியாவில் பெண்ணடிமைத்தனம் அதிகளவில் உள்ளதற்கு இந்து மதத்தால் உருவாக்கி, நிலை நிறுத்தப் பட்டுள்ள ஆண்மை - பெண்மை தத்துவமே காரணம். பெண்மை என்ற தத்துவத்தை அழிப்பதே பெண் விடுதலையின் முதல் படியாகும்.

பெண்மை அழிய வேண்டுமானால் ஆண்மை என்ற தத்துவம் முதலில் அழிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஆண்மை அழிந்து பெண்மை ஒழிந்தால் தோழமை வளர்ந்து சமத்துவம் உருவாகும். இதுவே ஆண்கள் விடுதலைக்கு வழியாகும்.

**பிள்ளை பேறு:**

பெண்கள் தங்கள் விடுதலைக்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று நம்புவதால்தான், தானும் அடிமையாகி, ஆண்களையும் சுதந்தரமற்ற அடிமைகளாக்குகின்றனர்.

இந்நிலைக்கு, பெண் ஆணின் துணையில்லாமல் தனது பிள்ளைகளை வளர்க்க முடியாது என்று நம்புவதாலும், தனது இறுதிக் காலத்தில் பிள்ளைகளின் ஆதரவில் வாழலாம் என்றும், தாய்மைதான் பெண்ணிற்குச் சிறப்பு என்ற சமூகக் கண்ணோட்டத்தின் படியும் - அதுவும் ஆண் பிள்ளை பெற்றால் தன் மாமியாரிடம் தான் அடிமையாய் இருந்ததுப்போல, பிற்காலத்தில் தனது மருமகளிடம் தானும் ஆதிக்கம் செலுத்தலாம் என்ற இந்துப்பண்பாட்டின் கருத்தியல் படியும் திருமணம் ஆனவுடன் முதல் வேலையாகப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள்.

பிள்ளைகளை வளர்க்கப் பல தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அதனால் தனது இலட்சியம், முன்னேற்றம் அனைத்தும் தடைப் படுகிறது. இது ஆண்களைப் பெரிதும் பாதிக்கிறது அதாவது குழந்தை பெற்ற ஆணிற்கு, தான் இந்தச்சமூகம் சொன்ன கடமையை நிறைவேற்றிய கம்பீரத்தில் இருந்து துவங்குகிறது அவனது அடிமை வாழ்க்கை. எவ்வாறு எனில் தன் வாரிசுகளை வளர்க்க சுயநலம் மேலோங்கி, நேர்மையற்ற முறையிலும் கூடப் பொருள் தேட வேண்டியுள்ளது. இங்கு ஆண் - பெண் இருவரது சுதந்திரமும் பறிபோகிறது. எனவே குழந்தை தவிர்ப்பின் மூலம் பெண் மட்டுமல்ல ஆணிற்கும் அது பெரும் விடுதலையாகிறது.

**உடை**

ஆண்களைப் போலவே பெண்கள் உடையணிவதால் நேரம் பணம் மிச்சப்படுகிறது. பெண்கள் தங்கள் பணிகளைத் தடையின்றிச் செய்ய முடியும். இதில் ஆண்களுக்குத்தான் விடுதலை கிடைக்கிறது.

மேலும் விபரங்களுக்கு: புடவை மேட்சிங் பிளவுஸ் எடுக்க மனைவியுடன் கூட சென்ற கணவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

**வாகனம்**

பெண்கள் தாங்களாகவே வாகனம் ஓட்டினால், தமது வேலைகளை யாருடைய தயவு மில்லாமல் தானே விரைவாகச் செய்து முடிக்க முடியும். இதனால் ஆணிற்கு என்ன விடுதலை?

இந்தக் கேள்வியை மனைவிக்கு டிரைவர் வேலை பார்க்கும் கணவர்களைக் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்.

**நகை- அணிகலன்**

நகை மாட்டும் ஸ்டாண்டுகளாகவும், அழகுப் பதுமைகளாகவும் பெண்கள் தங்களைக் காட்டிக் கொள்ள விரும்புவதால் பெண், ஆணுக்காகப் படைக்கப்பட்டவள் என்ற கருத்தை ஏற்பவளாகிறாள். இதனால் தனது சுயமரியாதையை இழப்பதோடு ஆணின் சொல்லமுடியாத துன்பத்திற்குக் காரணமாகிறாள். அது எப்படி என்று

ஒரு நிகழ்ச்சிக்குச் செல்ல தாயராகி மனைவியின் அலங்காரத்திற்காகக் காத்திருந்து, அழைத்துச் சென்று கூடவே திரும்பி வரும் வரையில் யாரும் தன் மனைவியை சைட் அடித்து விடக் கூடாது என்று 'பாடிகாட்' வேலை பார்த்து, தனது நிம்மதியை இழந்த கணவர்களிடம் கேளுங்கள். கோபமே படாமல் கூறுவார்கள்.

இது போல நாம் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் நம் அடிமை தனத்தின் காரணமாக ஆண் பெரிதும் அடிமையாகிறான்.

**எனவே பெண்களே! இனியும் காலம் தாழ்த்தாமல் நம் அடிமை விளங்கை உடைத்தெறிவோம்!**
**இந்த அடிமை விலங்கில் கட்டப்பட்டிருக்கும் ஆணும் விடுதலை பெறட்டும்!**



நகை, அழகுப்பொருள், பட்டுச்சேலை அனைத்தையும் புறக்கணிக்க வேண்டும். கிடா வெட்டுக்கு நேர்ந்து விடப்படும் செம்மறி ஆடுகளைப் போல தேவையின்றி பூ வைத்துக் கொள்ளும் பழக்கத்தைப் பெண்கள் கைவிட வேண்டும்.

திருமணங்களில் பெண்களின் சம்மதத்தையும், பெண்கள் சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்பதையும் கட்டாயமாக்கு !
'திருமணம் தேவையில்லை' என்றும், 'குடும்ப அமைப்பே வேண்டாம்' என்றும் முடிவெடுத்துத் தனித்து வாழத் துணிந்த பெண்களுக்கு, அரசு மாவட்டந்தோறும் தங்கும் விடுதிகளை உருவாக்கு!





பெண்களுக்கு என தனியாக இருசக்கர வாகனங்கள் வடிவமைப்பதையும், தயாரிப்பதையும், அதன் வணிகத்தையும் தடைசெய்!

திருமணங்கள் உறுதி செய்யப்படும் போதே, அந்த மணமக்களுக்குத் 'தனிக்குடித்தனம்' என்பதைக் கட்டாயமாக்கு!



காட்டாறு







அனைத்துப் பாலினப்பாகு பாடுகளுக்கும் எதிராக - பாலின வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்களை உருவாக்கக்கோரி, ஒரு அடையாளமாக, முதற் கட்டமாக, **2017** டிசம்பர் **24** ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும் ஒரு நாள்“சமையல் மறுப்புப் போராட்டம்” **#Boycott Cooking #Boycott Kitchen** நடத்துவோம். யாரும் தெருவுக்கு வரவேண்டாம். வெளியில் யாருடனும் போராட வேண்டாம். காவல்துறை யோடும் நீதிமன்றங்களோடும் போராட வேண்டாம். சிறைச்செல்ல வேண்டாம். இதுவரை வீட்டில் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அனைத்து அடிமைப் பணிகளையும் புறக்கணித்தால் மட்டும் போதும்.

Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com